# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

### அருட்சகோதரிகள்

*மேரி செசரியா, ரூபெல்லா மேரி, ஜெரின் மேரி, லில்லி புஷ்பம், புஷ்பம் - சிந்தாமணி, ரூபி - வித்யா மேரி, ஸ்டெல்லா ரோஸ்- திண்டுக்கல், , ரஞ்சிதம், பிரேமா, லில்லி இசபெல்லா மேரி, ஜோஸ்பிட்டா மேரி, சேசு ராஜம், ஜூலி எலிசெபெத், லோரா மேரி, லீமா, சகாயம், லூர்து மேரி, ஜான்சி மேரி, ஏதெல் பெல்சியா, ஹெலென் மேரி, வில்சன் மேரி, அருள் சேவியர்*

### பொதுநிலையினர்

*பிரான்சிஸ் பேசில், அனிருத் ஜோஸ்வா, ஜேடன், லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா, செலின் மேரி, இருதய விஜில்லா - திண்டுக்கல், ஜோஸ்வா சந்தோஷ், கெர்மன், கரோலின் பிலலேந்திரன், மாசில்லா -தூத்துகுடி, புஷ்பக்கன்னு - கோவை, சிப்ரியான்-தெளி, ஜோசப் சக்கர் ஜானி- திருச்சி, மேரி மார்கிரேட் - திருச்சி, பாத்திமா, , மார்கிரேட் பெல்சியா, லீலாவதி, ஜெகத்ரெட்சகர், அமலச்செல்வி, அன்னி பீட்டர்ராஜ், கனிஷியஸ் விஷால், வியாகுல மேரி, ஜான் ஜோசப், ஜெனிபா,* அடைக்கலமேரி சூர்யா அன்பு வளன், ஆய்டனிகா ஷெர்லி, ஜோஸ்பின் சகாய ராணி, நான்சி பியூலா, மரிய பிரகாசம்

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



**அ.சகோ. லில்லி புஷ்பம்- தஞ்சாவூர்**
**திருமதி. லீமா தெரேஸ்- திருச்சி**

**Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. M. Antony Shaji OSM.**





# இறைவனின் தாய்


## பதிப்பாசிரியர் பக்கம்




அன்னை மரியின் பக்தர்களே! ஆகட்டும் இதழின் வாசகர்களே! ஆகட்டும் இதழின் வாயிலாக மீண்டும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி! உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். இந்த புதிய ஆண்டானது உங்கள் வாழ்க்கையில் எல்லா இன்பங்களை வாரி வழங்கும் ஆண்டாகவும், உங்கள் அனைவரின் கனவுகளையும் நிறைவேற்றும் ஆண்டாகவும் அமையட்டும்.

இந்த புத்தாண்டோடு சேர்த்து நாம் அன்னை மரியாள் இறைவனின் தாய் என்ற பெருவிழாவினையும் கொண்டாடுகின்றோம். இந்தப் பெருவிழாவானது பல கேள்விகளை நம்மிடம் எழுப்புகின்றது. ஒரு சாதாரணப் பெண்மணி எவ்வாறு உலகைப் படைத்த கடவுளின் தாயாக மாறமுடியும்? அன்னை மரியாள் ஒரு படைப்புப் பொருள் அப்படிப்பட்டவர் எவ்வாறு படைத்தவரின் தாயாக மாற முடியும்? இந்த கேள்விகள் அனைத்திற்கும் பதில், நிச்சயமாக அன்னை மரியாள் இறைவனின் தாயாக மாறமுடியும். காரணம் கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை.

கடவுள் தான் படைத்த படைப்புகளாகிய மனித இனத்தை பார்க்கின்றார். இந்த மனித இனமானது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. காரணம் இந்த மனித இனமானது அம்மா என்ற உறவினைக் கொண்டிருக்கின்றது. அம்மா என்கின்ற உறவானது தன்



## உள்ளே




| | |
|---|---|
| அன்னை மரியாவின் கற்றலும் ஆன்மீகமும் | - 05 |
| அன்னை மரியாவின் திருப்பயணம் | - 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| மீப்புப்பயணம் | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மாதா மன்றாட்டு மாலை | - 25 |
| பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் | - 28 |
| திருஅவை வரலாற்றில் மரியாள் காட்சிகள் | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

பிள்ளைகளை மிகவும் அன்பு செய்கின்றது, பிள்ளைகள் உடல்நிலை சரியில்லாமல் இருக்கும்போது இரவெல்லாம் கண்விழித்து அவர்களைக் கவனித்துக் கொள்கிறது. தனக்கு உண்பதற்கு உணவு இருக்கின்றதோ இல்லையோ தன்பிள்ளைகளை பசி போக்குகின்றது. விழா நாட்களில் தனக்கு உடுத்துவதற்கு உடை இருக்கின்றதோ இல்லையோ தன் பிள்ளைகளுக்கு புத்தம்புதிய ஆடைகளை உடுத்துகின்றது. கடினமான காலகட்டங்களில் தன் பிள்ளைகளின் கண்ணீரைத் துடைக்கும் கரங்களாக இருக்கின்றது. இவை அத்தனையையும் கடவுள் பார்க்கின்றார். பார்த்த கடவுள் ஏங்குகின்றார், எனக்கு இதுபோல் ஒரு தாய் இல்லையே. முடிவு செய்கின்றார் எனக்கும் ஒரு தாய் வேண்டும். அன்னை மரியாளைத் தன் தாயாகத் தேர்ந்தெடுக்கின்றார்.

இந்த விழாவின் சிறப்பு என்னவென்றால் மகன் தன் தாயைத் தேர்ந்தெடுப்பது. மகனாகிய கடவுள் தன் தாயாக மரியாளைத் தேர்ந்தெடுக்கின்றார். பொதுவாக எந்த தாயும் எனக்கு இப்படிப்பட்ட குழந்தை தான் வேண்டும், என்று குழந்தையை தேர்ந்தெடுப்பது கிடையாது. அதுபோல் எந்த குழந்தையும் எனக்கு இப்படிப்பட்ட தாய்தான் வேண்டும் என்று தன்னுடைய தாயினைத் தேர்ந்தெடுப்பது கிடையாது. தத்தெடுக்கப்படும் குழந்தைகளுக்கு, தாய்மார்களுக்கு இது பொருந்தாது. கடவுள் தன் தாயைத் தேர்ந்தெடுத்தார் என்பதைவிட உருவாக்கினார் என்பதுதான் சரியானதாக இருக்க முடியும்.

கடவுள் உலகைப் படைக்கும்போது தான் படைத்த அனைத்தும் நல்லதெனக் கண்டார். மனிதரைப் படைக்கும்போது மிகவும் நல்லதெனக் கண்டார். அதுபோல் தன் தாயாகிய அன்னை மரியாளைப் படைக்கும்போது நிச்சயமாக நல்லதெனக் கண்டிருப்பார். இயேசுவின் வருகைக்காக பாதையினை செம்மைப்படுத்திய கடவுள் தன் தாய் அன்னை மரியாளின் வருகைக்காகவும் பாதையினை செம்மைப்படுத்துகின்றார். எவ்வாறு செம்மைப்படுத்துகின்றார் என்றால் அன்னை மரியாள் பிறக்கும்போதே ஜென்மப்பாவமில்லாமல் பிறக்க வைக்கின்றார். உலகிலுள்ள மனித இனமே ஜென்மப் பாவமான ஆதிப் பெற்றோரின் பாவத்தில் விழுந்து கிடக்கும்போது அன்னை மரியாளுக்கு அந்தப் பாவத்திலிருந்து கடவுள் விலக்கு அளிக்கின்றார்.அதோடு நில்லாமல் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த போதிலும் அன்னை மரியாள் கன்னிமையை இழக்காமல் பார்த்துக் கொள்கின்றார். அன்னை மரியாள் இயேசுவைப் பெற்றெடுப்பதற்கு முன்னும் கன்னி, பெற்றெடுக்கும்போதும் கன்னி மற்றும் பெற்றெடுத்த பின்னும் கன்னி. இவ்வளவு சிறப்புக்களை பெற்ற அன்னை மரியாள் கடவுளின் தாயாக இருப்பதில் எந்தவொரு வியப்புமில்லை.







எனக்கு பயமாக இருந்தது. ஐந்தாம் மாதத்தில் ஏதேனும் பிரச்சனை வருமென்று. ஆதனால் வாரம் வாரம் சனிக்கிழமை ஜீவ மாதாவிடம் ஒப்புக்கொடுத்து ஜெபமாலை ஜெபித்துக் கொண்டு வந்தேன். இப்பொழுது அன்னை மரியாள் எனக்கு ஒரு மகனை கொடுத்திருக்கிறார்கள். *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

**5. ரெட் ஹில்ஸ்**

எனக்கு திருமணமாகி 11 ஆண்டுகளாகிறது. முதல் பிரசவத்தில் பெண் குழந்தை, பத்து ஆண்டுகள் கழித்து, இப்பொழுது ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறார்கள். குழந்தை வயிற்றில் இருக்கும் போதே ஜான்டிஸ் *(Jaundice)* வந்துவிட்டது. மருத்துவர் கூறினார், “குழந்தை ஆபத்தான நிலையில் இருக்கிறது” என்று. ஆனால் குழந்தை சனிக்கிழமை அன்று பிறந்து, அடுத்த ஒரே வாரத்தில் நலம் பெற்றான். *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

6. எனது சொந்த ஊருக்கு சென்ற பொழுது அங்கு குழந்தை இல்லாமல் ஜீவ மாதாவிடம் ஜெபிக்க வேண்டிக் கொண்டார்கள். இங்கிருந்து வளையல்கள் வாங்கிக் கொண்டு சென்றேன். அந்த தம்பதியர்கள் ஜெபித்து நான்கு மாதத்தில் கருவுற்று இப்பொழுது அவர்களுக்கு இரட்டை குழந்தை பிறந்தது. மேலும் இரு தம்பதியர்கள் ஜெபிக்க கேட்டார்கள், ஒருவருக்கு ஆண் குழந்தையும் ஒருவருக்கு பெண் குழந்தையும் பிறந்தது. நம்பிக்கையோடு ஜீவா மாதவிடம் ஜெபியுங்கள், உங்க ஜெபங்கள் கேட்கப்படும். *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

**குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்**

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்பணி. லீபன் டேவிட். மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

டிசம்பர் மாதம் 6 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**1. மெல்வின் ஆரோக்கியராஜ்**

எங்களுக்கு திருமணமாகி ஓராண்டு காலமாக குழந்தை இல்லை. குழந்தை இயேசு ஆலயத்தை குறித்து வலைத்தளத்தில் நாங்கள் பார்த்தோம். 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இங்கு வந்து ஜீவ மாதாவிடம் ஜெபித்த 15 நாட்களிலே நாங்கள் கருவுற்றோம். *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

**2. சகாய டெலினா தினேஷ்**

எங்களுக்கு 2021 ஆம் ஆண்டில் திருமணமானது. அப்போது இருந்து ஜீவ மாதாவிடம் குழந்தை வரத்துக்காக மன்றாடிக் கொண்டிருந்தேன். அன்னையிடம் அழுது வேண்டி அடுத்த முறை நான் வரும்போது எனக்கு குழந்தை வேண்டும் என்று கோரிக்கை வைத்தேன். அதேபோல் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இங்கு வந்து ஜெபித்த பிறகு நான் கருவுற்றேன். இப்பொழுது ஆண்டவர் எனக்கு ஒரு அழகிய பெண் குழந்தையை கொடுத்திருக்கிறார். *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

**3. மோகன்ராஜ்- பிரேமா**

எங்களுக்கு திருமணம் 2010 ஆம் ஆண்டில் நடந்தது. கடந்த 12 ஆண்டுகளாக எங்களுக்கு குழந்தை இல்லாமல் இருந்தது. நாங்கள் அன்னை மரியாவிடம் ஒப்புவித்து ஜெபித்தோம். இப்பொழுது ஜீவ அன்னை எங்களுக்கு ஒரு அழகிய பெண் குழந்தையை கொடுத்திருக்கிறார். மகளுக்கு மூன்று வயது ஆகிறது. *இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!*

**4. கிறிஸ்டோபர் கிஷோர்- அலிஸ் (சோழிங்கநல்லூர்)**


எனக்கு முதல் குழந்தை பிறக்கும் பொழுது, ஐந்தாம் மாதம் ஸ்கேன் செய்தபோது ஏதோ பிரச்சனை இருப்பதாக சொன்னார்கள். அதன் பின் மகள் பிறந்து விட்டாள். இப்பொழுது இரண்டாம் முறையாக கருவுற்றேன்,





# மரியாவின் ஆன்மீகம்

அருள்பணி. குழந்தைசாமி ம.ஊ.ச
மறைமாநில அதிபர்



### அன்னை மரியாவின் கற்றலும் ஆன்மீகமும்

கற்றலின் ஆழமான அழகிய நோக்கம் ஒன்றே: "ஆண்டவரின் அழகை அவரது வார்த்தையில் காணவும், மகிழவும், உளமாற உண்மையின் ஒளியில் ஒன்றிப்பதாகும்." ஆக, தூய ஆவியின் துணையால் அழைத்த ஆண்டவருகே *ஆகட்டும்* என அர்பணித்து அவனியில் அவர் திட்டம் முழுமைப்பெற தனது பங்கை பாங்குடன் நிறைவேற்றி, அனைத்தும் அவரது அருளாலே நிகழ்கின்றது என்ற நம்பிக்கையின் ஒளியில் அக உணர்வோடு, அமைதிக் கொண்டு அல்லும் பகலும் என அயராமல் ஒத்துழைப்பு நல்கி, முடிவற்ற ஆனந்தம் நிறைந்ததே, அன்னையின் அரிய ஆன்மீக வாழ்வு. இவ்வுண்மையை கேட்டறிந்தோர் பலர் இருப்பினும் வெகு சிலரே அன்னையின் வழியில் பயணித்து பாருலகம் பயன்பெற்று மீட்பு பெற உதவுகின்றனர்.

இத்தகைய நேர்த்தியான ஆன்மீகத்தை இதயம் நிறைந்தப் பற்றுதலோடு இனிதே வாழ்ந்திட அன்றே இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் சுட்டிக்காட்டியது (தி.அ: 67).

அன்னை மரியாவின் ஆன்மீகத்தை மேலெழுந்து போற்றுதலோடு நின்று விடாமல், நாம் வாழும் சூழலில் இறைவார்த்தையை மையம் கொண்ட ஆன்மீகமே இயேசு விரும்பும் இனிய ஆன்மீகம். ஒரு நாள் இயேசு போதித்துக்கொண்டிருந்தபோது கூட்டத்திலிருந்த பெண் ஒருவர், "உம்மை கருதாங்கி பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்" என்று குரலெழுப்பி கூறினார், அதற்கு அவரோ, "இறைவார்த்தையைக் கேட்டு அதை கடைபிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர்" என்றார். ஆக இறையருளால் நிரப்பப்பெற்ற இனிய சகோதர சகோதரிகளே, இனி அச்சம் வேண்டாம். அண்னையின் ஆண்மீகம் அரிய ஆன்மீகமாக இருந்தாலும் அணைவருக்கும் சாத்தியம் என்பதை உணர்த்தி சரித்திரம் படைத்திட அவர் உக்களுக்கு சொல்லுவதெல்லாம் செய்யுங்கள் (யோ 2:5) என அறைகூவல் விடுத்தார். காணாவூர் திருமண விழாவில் குறைதீர்க்கவும், தம் மகன் இயேசு இறைமாட்சியை வெளிப்படுத்தவும், அதன் பயனாக அவருடைய சீடர்கள் அவர்மீது நம்பிக்கை கொண்டு பின்பற்றிய சீடத்துவமே சிறந்த ஆன்மீகம். நம்மை சிந்திக்க தூண்டும் சீரிய ஆண்மீகம். எனவே அண்னையின் வழியில் நம் ஒவ்வொருவரின் சீடத்துவ ஆண்மீகமும் புதுபொலிவுடன் வடிவம் பெற்றிட, திருஅவை துடிப்புடன் செயலாற்றிட, நாளும் இறையாசிர் வேண்டி, இப்புதிய ஆண்டில் இன்முகம் கொண்டு, இன்புற்று, இயேசுவோடு இறையாட்சிக்கு வித்திட இணைந்து பயணிக்க கற்போம், அதற்கேற்ப நிற்போம். அண்னை மரியாவின் ஆன்மீகம் நமக்கு கலங்கரை விளக்காக எந்தச் சூழ்நிலையிலும் செயலாற்றும் என்ற எதிர்நோக்கோடு பயணிப்போம். God Bless

*Happy New Year- 2026*

# அன்னை மரியாவின் திருப்பயணங்கள்

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

### பயணம் ஐந்து தொடர்கிறது

## தொடக்கவுரை

இறைவனின் பேரன்பினாலும் கடல் போன்ற கருணை உள்ளத்தினாலும் ஒரு புத்தாண்டு நமக்கு கொடையாகக் கொடுக்கப்படுகிறது. அவரின் அன்புக் கரங்களிலிருந்து மகிழ்வுடன் 2026 ஆம் ஆண்டினைப் பெற்றுக் கொள்வோம். வாசகர்கள் அனைவருக்கும் இனிமையான, இதமான, வளமையான, அருள் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள். உண்மையிலேயே புதிய ஆண்டினை வரவேற்கும் நாம் பேறுபெற்றோர். ஏனெனில் நம்மை விட்டு பிரிந்த அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள், இன்னும் இயற்கை சீற்றத்தினால் கொத்து கொத்தாக மடிந்த எண்ணற்ற அப்பாவிகள் ஆகிய எத்தனையோ பேர் ஆவலுடன் இப்புத்தாண்டை நினைத்து பல வகையான கனவுகளோடு எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். ஆனால் காண முடியவில்லை. எனவே தான் புதிய ஆண்டு என்பது தாயினும் சாலப் பரிந்து நம்மை அன்பு செய்யும் விண்ணகத் தந்தையின் ஒப்பற்ற கொடையாகக் கருதுகிறோம். அதைப் பெறுவதற்கு நமக்கு தகுதி இல்லை என்றாலும், நம் இறைவன் நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கி இருக்கின்றார். எனவே அவரின் உரிமை மக்கள் என்ற சுதந்திர உணர்வுடன் ஆண்டின் ஒவ்வொரு நாளையும், ஒவ்வொரு நிமிடத்தையும் பொக்கிஷமாயப் போற்றுவோம். நிறைய செபிப்போம். ஏராளமான நன்மைகள் செய்வோம். அர்த்தமுள்ள வாழ்வு வாழ்வோம். ஆண்டவர் - இம்மானுவேல் நம் அருகில் நெருக்கமாக இருந்து நம்மை இயக்குவதை உணர்வோம். திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் இறையன்புக்கு, இறை இரக்கத்திற்கு நமது வார்த்தை, வாழ்வால், வழிபாட்டு பங்கேற்பால் சாட்சி பகர ஆண்டின் முதல் நாளில் உறுதி எடுப்போம். இம்மாதத்தின் இறைவேண்டலின் மையக்கருத்தாக திருத்தந்தை இறைவார்த்தையை மையப்படுத்தி செபிக்க அழைக்கின்றார். அவ்வாறு செபிக்கும் போது நமது வாழ்வு ஆன்மிக ஊட்டச்சத்துப் பெற்று வளர்கிறது. நாம் நம்பிக்கையின் ஊற்றாக இருக்கிறோம். சகோதர உறவும், மறைப்பணி ஆர்வமும் கொண்ட திருஅவை மலர வேண்டும். இத்தகைய விசாலமான சிந்தனை, பார்வையுடன் நமது புத்தாண்டிற்குள் நுழைவோம்.

## எகிப்தில் திருக்குடும்பம்

கடந்த இதழில் திருக்குடும்பம் எகிப்து நாட்டுக்கு பல இன்னல்கள் மத்தியில் தப்பித்துச் சென்றதைப் பார்த்தோம். அன்னையின் ஐந்தாவது பயணத்தின் இரண்டாவது பகுதியை இக்கட்டுரையில் காண்போம். மரியா,





என்பதே. இந்நிலையில் மரியாவின் காட்சிகள் நற்கருணை மையத்தை கடந்தவை அல்ல, மாறாக அதற்கு வழிகாட்டும் அடையாளமாகவே புரிந்து கொள்ளப்படவேண்டும். மரியாவின் காட்சிகளில் அடிக்கடி திருப்பலி, ஜெபம் மற்றும் திருஉணவு பற்றிய அழைப்புகள் காணப்படுகின்றன. இதனால் மரியாள் எப்போதும் நம்பிக்கையாளர்களை திருவழிபாட்டை ஆழமாக வாழ அழைக்கிறார் என்பதை அறியலாம்.

**2. மரியாளின் காட்சிகள்: வரையறையும் வகைப்பாடும்**

திருஅவை திருவெளிப்பாடுகளை இரண்டு வகையாக பிரிக்கின்றது. அவை போது வெளிப்பாடு ***(Public revelation***) மற்றும் தனி வெளிப்பாடு ***(Private Revelation)*** பொது வெளிப்பாடு கிறிஸ்துவில் முழுமை அடைகிறது. அது திருத்தூதர்களின் காலத்தோடு முடிவடைந்துவிட்டது. ஆனால் தனி வெளிப்பாடு ***(Private Revelation)*** என்பது மரியாள், புனிதர்களின் காட்சிகள் அடங்கும். இவை நமது விசுவாசத்திற்கு புதிதாக எதுவும் சேர்ப்பதல்ல, ஏற்கனவே இருக்கின்ற விசுவாசத்தை ஆழப்படுத்த உதவும் கருவிகளாகவே இருக்கின்றன.

திருஅவை மரியாளின் காட்சிகளை இன்று ***"Mariophany"*** என்று குறிப்பிடுகிறது. *Mario* என்பது கன்னி மரியாவை குறிக்கும். *Phany* (அ) *Epiphany* என்பது வெளிப்படுதல், வெளிப்பாடு என்று பொருள். இந்த வெளிப்பாடுகள் பல்வேறு வடிவங்களாக வெளிப்படுகின்றன: கனவுகள், தரிசனங்கள், உள்ளார்ந்த குரல்கள், இறைவாக்குரைத்தல் மற்றும் ஆன்மீக அனுபவங்கள் இவை அனைத்தும் பொது வெளிப்பாட்டை மாற்றுவதில்லை, மாறாக அதை ஆழமாக வாழ உதவுகின்றன.

இந்த வெளிப்பாடுகளை ஒரு அதிசயமான நிகழ்வுகளுக்குள் மட்டுமே சுருக்கிவிட முடியாது. திருப்பலியில் இறைவார்த்தை அறிவிக்கப்படும் தருணங்களிலும், இயற்கையின் அழகான அனுபவங்களிலும்- சூரிய உதயம், சூரிய அஸ்தமனம் போன்றவற்றிலும் இறைவன் மனிதனிடம் உரையாட முடியும். இவைகளும் இறைவனின் வெளிப்பாடுகளே, எனவே இறைவனின் வெளிப்பாடுகள் என்பது மனித அனுபவத்தின் முழுமையையும் உள்ளடக்கியதாகும்.

**மரியாவின் காட்சிகளை இரண்டு வகைகளாக பிரிக்கலாம்:**

1. தனிநபருக்கான காட்சி
2. பொதுக் காட்சி

தனிநபருக்கான காட்சிகள் ஒருவரின் தனிப்பட்ட விசுவாச வளர்ச்சிக்காக வழங்கப்படுகின்றன. பொதுக் காட்சிகள் ஒரு குடும்பத்திற்கு, ஒரு துறவு சமூகத்திற்கு, ஒரு பங்கிற்கு, ஒரு மறைமாவட்டத்திற்கு, ஒரு நபருக்கு அல்லது முழு உலகிற்கும் வழங்கப்படுகின்றன. இவை திருஅவை வாழ்வில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இத்தகைய காட்சிகள் *Pastoral* முக்கியத்துவம் பெறுகின்றன. லூர்து, பாத்திமா போன்றவை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகள்.

திருஅவை வரலாற்றில் பல அதிசய குணமடைதல்கள் மரியா, புனிதர்களின் காட்சிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவை மருத்துவ ரீதியிலும், இறையியல் ரீதியிலும் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. இத்தகைய நிகழ்வுகள் மனிதனை விசுவாசத்தில் உறுதிப்படுத்துவதற்கான அடையாளங்களாக மட்டுமே கருதப்படுகின்றன. அவை விசுவாசத்தின் அடிப்படையாக கருதப்படுவதில்லை.

மரியாவின் காட்சிகளின் மற்றொரு உண்மை என்னவென்றால் மரியா கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, உலகின் எல்லா பகுதிகளிலும், இன, பண்பாடு, சமூகநீதி, மதம் என்ற வேறுபாடுகள் இல்லாமல் அனைவருக்கும் காட்சி தருகின்றார். உதாரணமாக தைவானில் தாவோ மதத்தை சேர்ந்தவர்க்கு காட்சி தருகின்றார். இந்தியாவில் இந்துக்களுக்கு, எகிப்தில் முஸ்லீம்களுக்கு, சீனாவில் புத்த மதத்தினருக்கு மரியன்னை காட்சி தந்ததாக வரலாறு கூறுகிறது. இதன் மூலம் கடவுள் மனிதர்களை வேறுப்படுத்தி பார்ப்பதில்லை அவர்முன் அனைவரும் சமம். அவர் தோன்றுவதன் நோக்கம் மனிதனை மனமாற்றத்திற்கு அழைப்பதுதான். உரோமையில் "திரே ஃபொந்தானே" (*Tre Fontane*) என்ற இடத்தில் ஒரு கம்யூனிஸ்ட் மனிதன் போப்பாண்டவரை கொல்ல திட்டமிட்டிருந்த நிலையில் மரியண்ணையின் காட்சியைக் கண்டான், மனமாறினான். இதன் மூலம் நாம் அறிந்து கொள்வது, மரியன்னை காட்சி கொடுப்பதன் நோக்கம் மனமாற்றம், வாழ்க்கை மாற்றம், மற்றும் நம்பிக்கை கொடுப்பதற்காகதான்.

# திருஅவை வரலாற்றில் மரியாள் காட்சிகள் 1

அருட்பணி. ஜெகநாதன் ம. ஊ. ச
பெங்களூர்



**முன்னுரை**

திரு அவை வரலாற்றில் மரியாவின் காட்சிகள் பல இடங்களில் நிகழ்ந்துள்ளன. இக்காட்சிகள் அனைத்தும் புதிய நம்பிக்கைகளை உருவாக்குவதற்காக அல்ல மாறாக ஏற்கனவே உள்ள நற்செய்தி விசுவாசத்தை ஆழமாக வாழவும், மனிதரை மனமாற்றத்திற்கும், ஜெபத்திற்கும் அழைக்கவும் நிகழ்ந்தவை என திரு அவை நமக்கு போதிக்கின்றது.

இயேசு கிறிஸ்துவில் கடவுள் தன்னை முழுமையாக மனித வரலாற்றில் வெளிப்படுத்திவிட்டார். ஆகையால் மரியாளின் காட்சிகள் வழியாக புதிதாக வெளிப்படுத்துவதற்கு ஏதுமில்லை, ஏற்கனவே கூறப்பட்ட அந்தச் செய்தியை ஒரு குறிப்பிட்ட காலங்களிலும் சூழல்களிலும் மக்களுக்கு நினைவுப்படுத்தவும் கடவுளை நோக்கி திரும்ப வரவும் உதவும் ஒரு அழைப்பாக புரிந்து கொள்ள வேண்டும். பெரும்பாலான காட்சிகளில் அன்னை மரியாள் ஜெபம் தவம் மனமாற்றம் அமைதியை வலியுறுத்துகின்றார். ஆகவே மரியாளின் காட்சிகள் விசுவாசத்திற்கு கட்டாயமானவை அல்ல.

மரியாள் இயேசுவின் தாய் மட்டுமல்ல அவர் திருஅவையின் தாயுமானவர். கடவுளின் வார்த்தைக்கு முழுமையாக கீழ்ப்படிந்து கிறிஸ்துவை தன் கருப்பையில் ஏற்றுக்கொண்டவர் மரியாள். இந்த விசுவாசமும், கீழ்படிதலும் திருஅவை எப்படி வாழவேண்டும் என்பதற்கான ஒரு முன்மாதிரிகையாக இருக்கின்றார். காட்சிகளிலும் மரியாள் தன்னை முன்வைக்காமல் எப்போதும் கிறிஸ்துவை நோக்கி மக்களை வழிநடத்துகின்றார்.

திருஅவை வரலாற்றில் சுமார் 2000 ஆண்டுகளாக மரியாளின் காட்சிகள் நிகழ்ந்து வந்துள்ளன. இக்காட்சிகள் நம்பிக்கையாளர்களின் வாழ்வில் ஆழமான ஆன்மீக தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. இருப்பினும் இவற்றை வெறும் உணர்ச்சிபூர்வமான அல்லது அற்புத மையமான நிகழ்வுகளாக மட்டுமே புரிந்து கொள்வது போதுமானதல்ல. இறையியல், மரியாளின் காட்சிகளை திருவெளிபாட்டு வரலாற்றின் தொடர்ச்சியில் வைத்து ஆராய வேண்டும் என வலியுறுத்துகிறது.

இந்த அடிப்படை புரிதலின் ஒளியில், இக்கட்டுரையை மரியாவின் காட்சிகளை தனிப்பட்ட பக்தி அனுபவங்களாக மட்டுமே பார்க்காமல், அவற்றின் விவிலிய அடித்தளம், திருவெளிபாட்டு தத்துவம், திருஅவை மரபு கூறும் போதனை மற்றும் மேய்ப்பு பணி ஆகியவற்றின் ஒளியில் ஆராய்கிறது.

**1. விசுவாச வாழ்வின் மையம்: நற்கருணை**

கத்தோலிக்க விசுவாசத்தின் அடிப்படை இறைவார்த்தை மற்றும் திருவழிபாடு (Liturgy) ஆகும். குறிப்பாக நற்கருணையில் இறைவனைக் காணக்கூடிய, தொடக்கூடிய, அனுபவிக்கக்கூடிய வகையில் தன்னை வெளிப்படுத்துகிறார். எனவே மரியாளின் காட்சிகளை புரிந்து கொள்ளும்போது அவற்றை நற்கருணை மையத்திலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது.

கீழே திருஅவையின் மரபு "வாக்குறுதியளிக்கப்பட்ட நிலம்" என்பதற்கு ஒரு ஆழமான கிறிஸ்துவியல் விளக்கத்தை அளிக்கிறது" அது புவியியல் இடமாக அல்ல: மாறாக, மரியாளிடமிருந்து கிறிஸ்து ஏற்றுக்கொண்ட அவரது உடலே உண்மையான வாக்குறுதியளிக்கப்பட்ட நிலம் ஆகும். நற்கருணையில் நாம் பெறும் கிறிஸ்துவின் உடல், ஆதாம்- ஏவாள், பாவத்தால் மனிதன் இழந்த "வாழ்வின் மரம்" கிறிஸ்துவின் உடலாகிய நற்கருணையில் மீண்டும் நமக்கு வழங்கப்படுகிறது. இதன் பொருள், கடவுள் மனிதருக்கு மிக அருகில் வந்து, நமது வாழ்வில் தங்கி இருக்கிறார்





சூசை, குழந்தை இயேசு இவர்கள் அகதிகளுக்குரிய வாழ்வை எகிப்தில் வாழ்ந்தனர். ஏழ்மையை அதிகம் அனுபவித்தனர். ஆனால் அவர்களது வாழ்வு அமைதியான வாழ்வாக அமைந்திருந்தது என்று காப்டிக் கிறிஸ்தவர்களின் மரபு கூறுகிறது. மூவரும் அயல்நாட்டவர் போல் வாழ்ந்தனர். எத்தனை நாட்கள் வாழ்ந்தார்கள் என்ற கேள்வி நம்மில் எழலாம். மூன்றரை ஆண்டுகள் வாழ்ந்திருக்கலாம் என்றும், இவ்வாண்டுகள் இயேசுவின் வாழ்வில் மிக முக்கியமானது என்றும் கருதப்படுகிறது. உறவு என்று சொல்லக்கூடியவர்கள் இல்லாத நிலை. அந்நியர்களாகவும் அகதிகளாகவும் வாழ்ந்தார்கள். ஒவ்வொரு நாளும் உணவிற்காக வளனார் உழைத்திருக்க வேண்டும். அவருடைய தச்சுத் தொழில் பெரிதும் உதவியாக இருந்திருக்கும். எளிமையான உணவு, உறைவிடம் இவர்களின் மறக்க முடியாத அனுபவமாக இருந்தது. தெய்வீக பராமரிப்பில் நம்பிக்கை கொண்டவர்களாய் இருந்தனர். ஏனெனில் எகிப்து நாட்டில் குடிமகன் என்று சொல்லக்கூடிய சட்டப்பூர்வமான ஆதாரங்கள் இல்லை. எப்போதும் விரட்டப்படலாம் எனும் அச்சம் இருந்தது. இவை எல்லாவற்றையும் விட கொடுமையானவை: அந்நிய தெய்வங்களின் உருவங்களை அன்றாடம் பார்ப்பது, விழாக்களின் பேரொலியைக் கேட்பது அனைத்தும் ஒரே யாவே இறைவனிடம் மட்டுமே நெருக்கமாக அவர்களை அழைத்துச் சென்றது. உண்மையான இறைவனை அறியாத, வழிபடாத அம்மக்களுக்காகவும் இறைவேண்டல் புரிந்தனர். அந்நியக் கலாச்சாரத்தைக் கூர்ந்து கவனித்தனர்.

காப்டிக் மரபு மேலும் பல கருத்துக்களை பரவலாக்கம் செய்துள்ளது. பெத்லகேமிலிருந்து எகிப்துக்கு செல்லும் வழியில் தங்கியிருந்தது, மீண்டும் திரும்பிச் சென்றது போன்ற பயணங்கள் சீனாய் மலையைக் கடந்து வட எகிப்திலுள்ள மெம்பிஸ் வழியாக நடைபெற்றுள்ளது. திருக்குடும்பம் குகையிலும் கோவில்களிலும் தங்கியிருந்தது. சாகா என்னும் பாறையில் இயேசுவின் பாதச் சுவடுகள் படிந்துள்ளன. அங்கு புதுமைகள் பல நிகழ்ந்துள்ளன. திருக்குடும்பத்தினர் மொத்தம் 26 இடங்களைக் கடந்துள்ளனர். பாலன் இயேசு தனது முதல் அடிகளை எடுத்து வைத்து நடக்கத் தொடங்கியது, அமுத வாயைத் திறந்து முதன்முறையாக பேசியது எல்லாம் இங்கு தான். இவ்வாறு குழந்தை இயேசுவின் ஆரம்ப வாழ்வு மலர்ந்தது. கடவுளை மெல்ல மெல்ல புரிந்து கொண்டார். மொத்தத்தில் எகிப்தில் மரியாவின் வாழ்வு கடுமையான சவால்களால் நிறைந்திருந்தது. மரியா இந்நிகழ்ச்சிகளை எல்லாம் உள்ளத்தில் வைத்து சிந்தித்து வந்தார். எந்தவித முறைப்பாடின்றி குழந்தை இயேசுவைக் காப்பாற்ற வேண்டும். இறைவன் அவர் மகனை எகிப்திலிருந்து அழைப்பார் என்ற இறைவாக்கில் நம்பிக்கை கொண்டு அந்நாளை ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தார்.

## இன்றைய அகதிகளின் நிலைமை

திருக்குடும்பம் எதிப்தில் அகதிகளுக்குரிய அனைத்து கொடுமையான பாதிப்புகளையும் சந்தித்ததைத் தியானிக்கும் போது, இன்றைய உலகில் அகதிகள் படும் அவல நிலை நமது இதயத்தைக் கசக்குகிறது. கண்களில்

நீர் ததும்புகிறது. 2024 ஆம் ஆண்டு மத்தியில் எடுத்த புள்ளிவிவர கணக்கின்படி 122.6 மில்லியன் மக்கள் புலம் பெயர்ந்துள்ளனர். அவர்களுள் மொத்த அகதிகளின் எண்ணிக்கை 43.7 மில்லியன். போர்கள், வேலைவாய்ப்பின்மை, மதம், இனம், மொழி இவற்றால் ஏற்படும் பாதிப்பு ஆகியவற்றினால் இவர்கள் தங்கள் சொந்த நாட்டை விட்டு பிற நாடுகளில் புகலிடம் தேடி அலைகின்றனர். முறையின்றி பிற நாடுகளுக்குள் நுழையும்போது நாடுகளின் எல்லைகளில் பாதுகாப்பு வீரர்களால் கடும் அவதிக்கு உள்ளாகின்றனர். கடல் வழியே படகுகளில் அதிக எண்ணிக்கையில் பயணம் செய்யும்போது கடலில் மூழ்கி இருக்கின்றனர். இறந்த ஒரு சிறுவனின் உடல் கடலில் கரையோரத்தில் ஒதுங்கிக் கிடந்ததைக் கண்டு இந்த உலகமே கண்ணீர் வடித்தது. மியான்மரிலிருந்து இலட்சக்கணக்கான ரோஹிங்யா அகதிகள் வெளியேற்றப்பட்டுள்ளனர். உணவு, உடை, உறைவிடம் இன்றி, இவர்கள் அனுபவிக்கும் சிரமங்கள் சொல்லில் அடங்காது. இது மனித உரிமை மீறல். இவர்களில் பெண்கள் சந்திக்கும் சவால்கள் ஏராளம். இவர்கள் பாலியல் வன்முறைகளுக்கு ஆளாகின்றனர். பெண் குழந்தைகள் குறைந்த கூலியைக் கொடுத்து நிறைய வேலைகளை வாங்குவதற்காகக் கடத்தப்படுகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகளுக்கான அமைப்பு இம்மக்களுக்காக பல திட்டங்கள் முன்னெடுத்தாலும் முதல் உலக நாடுகள் கூட இந்த அகதிகளை ஏற்றுக்கொள்ளக் கடுமையான சட்டங்களை இயற்றியுள்ளன. மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அகதிகளுக்காக குரல் எழுப்பினார். திருத்தந்தை 14 ஆம் லியோ, தனது உரையில் அகதிகளை பணக்கார நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். பல துறவற சபைகள் அகதிகள் வாழ்வில் ஒளி ஏற்றுகின்றன. நாமும் அன்னையின் அகதி வாழ்வைத் தியானிக்கும் போது, அகதிகள் வாழும் முகாம்களைச் சந்திக்க முயற்சி எடுப்போம். நம்மிடம் இருப்பதை அவர்களிடம் பகிர்ந்து கொள்வோம்.

**நாசரேத்தை நோக்கிய பயணம்**

துன்பப்படுவோரைக் கண்டு மனம் இரங்குபவர் தம் தாயும் தந்தையுமான இறைவன். எகிப்தில் இஸ்ரயேலின் அடிமை வாழ்க்கையைக் கண்ணுற்றார். மிகவும் வருந்தினார். தன் துயரத்தை மோசேயிடம் பின்வருமாறு, ‘எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன் அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலைக் கேட்டேன் ஆம், அவர்களின் துயரங்களை நான் அறிவேன். எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், அந்நாட்டிலிருந்து பாலும் தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு . . . அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்துள்ளேன்” (வி.ப. 3:7-8). மேலும் தொடர்கின்றார். ‘இதோ இஸ்ரயேல் மக்களின் அழுகுரல் என்னை எட்டியுள்ளது

தொடர்ச்சி 27 ம் பக்கம்...........





உங்கள் விண்ணப்பங்களை நிறைவேற்றுவதை ஒரு கடனை அடைப்பது போல மகிழ்ச்சி கொள்கிறார் என்று புனித நிக்கோமேதியாவின் ஜார்ஜ் கூறுகிறார்.

நான் பரலோக இராக்கினியாகவும், இரக்கத்தின் மாதாவாகவும் இருக்கிறேன்: நான் நீதிமான்களின் மகிழ்சியாகவும், பாவிகள் கடவுளிடம் கொண்டு வரப்படுகின்ற வாசலாகவும் இருக்கிறேன். என் இரக்கத்திலிருந்து விலக்கப்படும் அளவுக்கு சபிக்கப்பட்ட எந்தப் பாவியும் பூலோகத்தில் இல்லை, என்று நம் அன்னை புனித பிரிஜித்தம்மாளிடம் கூறியுள்ளார்கள்.

**கடவுளின் இரக்கத்தை அன்னை மரியா வழி பெறுதல்:**

யோசுவா 6 ஆம் அதிகாரத்தில் எரிக்கோ மதிலின் வீழ்ச்சி சொல்லப்பட்டுள்ளது. எரிக்கோ மதிலை இடிப்பதற்கு கடவுள் உலகப் பிரகாரமான முயற்சிகளை செய்யுங்கள் என்று இஸ்ராயேல் மக்களிடம் கூறவில்லை. மாறாக உடன்படிக்கை பேழையை தூக்கிக்கொண்டு எக்காளம் முழங்க எரிக்கோ மதிலை ஒரு நாளைக்கு ஒரு முறை வீதம் ஆறு நாட்களும், ஏழாவது நாள் ஏழு முறையும் சுற்றி வர கூறினார். ஏழாவது நாள் எரிக்கோ மதில் இடிந்து விழுந்தது. இந்நிகழ்வில் இருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் நம்முடைய பிரச்சனைகள் தேவைகள் எதுவாக இருந்தாலும் மனித முயற்சிகளால் சரிசெய்யலாம் என்று நினைப்பதை விட்டுவிட்டு கடவுளை புகழ வேண்டும். அப்போது எரிக்கோ மதில் இடிந்து விழுந்ததை போன்று எல்லாம் சரியாகும். நம்முடைய வல்லமையான பரிந்துரையாளரான அன்னை மரியாவை நாம் தொடர்ந்து மங்கள வார்த்தை செபத்தின் மூலம் புகழ்ந்து கொண்டே இருக்கும் போது நம்முடைய தேவைகள் அனைத்தும் நிறைவேறும். நமக்குள்ள பிரச்சனைகள் எவ்வளவு பெரிய இரும்புக்கோட்டையாக இருந்தாலும் நொறுங்கிவிடும். எனவே அன்னை மரியாவை தொடர்ந்து நேசித்து, தொடர்ந்து வாழ்த்துவோம்.

**நடைமுறை வாழ்வில் அன்னையை நேசித்தல்:**

நம்முடைய அன்றாட வாழ்வில் அன்னைக்குரிய பக்தி முயற்சிகளில் ஏதாகிலும் ஒன்றிரண்டை தேர்ந்தெடுத்து அவற்றை கடைபிடித்து வரலாம். மூவேளை செபம், குறைந்தபட்சம் 53 மணி செபமாலை, 5 முதல் 15 நிமிடம் அன்னையோடு சேர்ந்து சேசுவிடம் உரையாடுதல், உத்தரியம் அணிதல், அற்புத பதக்கம் அணிதல், மாமரியின் சிறிய செபக்கிரீடம் செபித்தல், மாமரியின் மந்திரமாலை செபித்தல், நாம் பிறருடன் பேசும் போது மாமரியின் புகழைப் பற்றி பேசுதல், குடும்பத்தில் அடிக்கடி அன்னையை பற்றிப் பேசுதல், அன்னையை குறித்து ஏழைகள், வறியவர்கள், நோயாளிகள், ஆகியோருக்கு உதவிகள் செய்தல், நம்முடைய வருமானத்தில் ஒரு சிறு பகுதியை அன்னையின் பக்தி பரவுவதற்காக செலவிடல் போன்ற நற்செயல்கள் மூலம் அன்னையை நேசிக்கலாம். 2026 ஆம் ஆண்டு முழுவதும் அன்னையை நேசிக்க நம்மாலான எல்லா முயற்சிகளையும் செய்து, அன்னையின் வழியாக சேசு தரும் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வோம்.

எங்கள் இனிய சேசுவே, அன்னை மாமரியை நாங்கள் அபிரிமிதமாக நேசிக்கும் வரம் தாரும் - ஆமென்.



# பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் 15

திரு. தா.சுரேஷ், பூம்பொழில் நகர், சென்னை

அன்னை மரியாவை பற்றிய புகழ்ச்சி வற்றாத நீர்ச்சுனையாகும். எவ்வளவு அதிகமாக அது விரிவடைகிறதோ, அவ்வளவுக்கு அது அதிக முழுமையானதாக ஆகிறது. எவ்வளவு அதிகமாக அதை நீங்கள் நிரப்புவீர்களோ, அவ்வளவுக்கு அதிகமாக அது விரிவடைகிறது. ஆகவே நாம் 2026 ஆம் ஆண்டு முழுவதும் அன்னையை எவ்வாறு அதிகமாக அன்பு செய்வது என்று சிந்திக்கவும் செயல்படவும் அழைக்கின்றேன். மரியாயின் மகிமைகளைப் பற்றிப் பிறருக்கு அறிவிப்பதை நோக்கமாகக் கொண்டவர்கள் தங்கள் மோட்ச பாக்கியத்தை உறுதி செய்து கொள்கிறார்கள் என்று புனித பொனவெந்தூர் கூறுகிறார். எனவே தங்களின் ஆன்ம மீட்பில் அக்கறையுள்ளவர்கள் செய்யும் நற்செயல்களில் ஒன்று அன்னை மரியாவின் புகழைப் பரப்புவதன் மூலம் சேசுவை மகிழ்ச்சிப் படுத்துவதாகும். எனவே அன்னை மரியாவின் இரக்கத்தைப் பற்றி சிந்தித்து, அன்னை மரியாவை நாள் முழுதும் அன்பு செய்ய முயற்சி செய்வோம்.

**அன்னை மரியா பற்றிய போதகம் அர்ச்சிப்புக்கு வழி:**

தேவதாயாரின் மீதான அன்பைக் குறித்த தம்முடைய போதகத்தின் மூலமாக புனித சியென்னா பெர்னார்தீன் இத்தாலியை அர்ச்சித்தார். இதே முறையில் புனித சாமிநாதர் பல மாகாணங்களை அர்ச்சித்தார்.

புனித லூயி பெர்த்ரோந்த் தம்முடைய மறையுரையில் மாமரியை நேசிக்கும்படி விசுவாசிகளுக்கு அறிவுறுத்துவதை ஒருபோதும் தவிர்த்ததில்லை. இவ்வாறே பல புனிதர்களும் செய்திருக்கிறார்கள்.

**இரக்கத்தின் அரசி அன்னை மரியா:**

கிறிஸ்து அகில உலகிற்கும் அரசர். அதுவும் இரக்கத்தின் அரசராக இருக்கிறார். அவ்வரசரின் அன்புக்குரிய தாய், நம் அன்னை மாமரியும் அரசியாக இருக்கிறார்கள். மாமரி உண்மையாகவே ஒரு அரசியாக இருந்தாலும், அவர்கள் நீதியின் அரசியாக தீயவர்களைத் தண்டிப்பதைத் தன்னுடைய நோக்கமாகக் கொண்டிராமல், பாவிகளுக்கு மன்னிப்பையும், சமாதானத்தையும் பெற்றுத் தருவதையே தன் நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இதனால் தான், நாம் மாமரியை கிருபை தயாபத்துக்கு மாதாவாகிய இராக்கினி என்று அழைக்க வேண்டும் என்று திருச்சபை விரும்புகிறது. மகிழ்ச்சியின் தைலத்தால் அபிஷேகம் செய்யப்பட்டுள்ள மாமரி தான் தன்னுடைய தாய்க்குரிய பரிந்துரையால், இரக்கத்தைக் கொண்டு கடவுளுடைய நீதியை தணிக்கின்றவர்களாக இருக்கின்றார்கள். கடவுள் அன்னை மரியாவுக்கு கொடுத்துள்ள வல்லமையை யாரும் எதிர்த்து நிற்க முடியாது. சேசு





# அன்னையின் 84 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



**மலையில் மணிமகுடம் சூடிய வியாகுல அன்னை திருத்தலம்,**
**பெர்ராரா தி மோன்தே பால்தோ, வெரோனா**

கி.பி. 10ஆம் மற்றும் 11ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் கோலோச்சிய சோழப் பேரரசின் எழுச்சியூட்டும் கலைப் பொக்கிசங்களாக திகழ்வன தஞ்சை பெரிய கோவிலும், கங்கைகொண்ட சோழபுரம் கோவிலும் என்றால் அது மிகையாகாது. இக்கோவில்களை கட்டப் பயன்படுத்தப்பட்ட கருங்கற்கள் எங்கிருந்து கொண்டுவரப்படன என்கிற கேள்வியும், ஆச்சரியமும் நம்மில் எழாமல் இல்லை. இக்காலக்கட்டத்தில் இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் பல்வேறு ஆலயங்கள் எழுப்பப்பட்டன. வானுயர்ந்து நிற்கும் இக்கோவில்களில் பல கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. இவைகளுக்கான கருங்கற்கள் அவற்றின் அருகாமையில் உள்ள மலைகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. ஆனால் அவற்றில் சில நம்மை வியப்பிற்குள்ளாக்குகின்றன. ஏனென்றால், அக்கோவில்கள் குறுகளான பாதைகள் கொண்ட மலைஉச்சியில் கட்டப்பட்டுள்ளன என்பதே அந்த ஆச்சரியம் ஆகும். அத்தகைய கோவில்களில் ஒன்றுதான் வெரோனா அருகில் அமைந்துள்ள வியாகுல அன்னையின் திருத்தலம் ஆகும்.



வெரோனா நகரைச் சுற்றிலும் அமைந்துள்ள மோன்தே பால்தோ என்ற மலைத்தொடரில் அமைந்துள்ள ஓர்சோ பள்ளத்தாக்கில் உள்ள சிற்றூர் பெர்ராரா ஆகும். இவ்வூரின் அருகாமையில் கடல் மட்டத்திலிருந்து 850 மீட்டர் உயரமுள்ள மலை உச்சி ஒன்றுள்ளது. செங்குத்தாக உள்ள இந்த இடத்திற்கு யாரும் எளிதில் சென்றுவிடமுடியாது. ஒரு புறம் ஆலயம், மறுபுறம் 40 ச.கி.மீ பரப்பளவு கொண்ட கார்தா ஏரியும் (lago di garda) உள்ளது. அப்பகுதியை சார்ந்த ஒரு சிலர் அம்மலை முகட்டின் உச்சியில் ஒரு குகையில் பிரகாசமான ஒளி மிளிர்வதைக் கண்டு வியந்தனர். அது என்ன என்பதை காண அவர்கள் செங்குத்தான அம்மலையில் கயிறு கட்டி

ஏறி அருகில் சென்றபொழுது அங்கு ஒரு சிறிய வியாகுல அன்னையின் சிரூபம் இருப்பதைக் கண்டனர். அவ்விடத்திலேயே அவர்கள் ஒரு சிறிய ஆலயம் எழுப்பி அச்சுருபத்தை நிறுவ முடிவெடுத்தனர். பல்வேறு சிரமங்களுக்கிடையே ஆலயமும் கட்டப்பட்டது. இச்சசுரூபத்தை பற்றியும், அங்கு கட்டப்பட்ட ஆலயத்தை பற்றியும் அறிந்த வியாகுல அன்னையின் பக்தர்கள் பல்வேறு இடர்களுக்கு மத்தியில் அந்த ஆலயத்திற்கு சென்று அன்னையை தரிசித்தனர். இச்சிற்றாலயத்தை பக்தர்கள் எளிதில் அடைய மலையை குடைந்து ஒரு குகையையும், அக்குகையை அடைய மலையில் படிக்கட்டுகளையும் வெட்டினார்கள்.




இச்சுரூபம் எப்படி இம்மலைக்கு வந்தது என்பதை பற்றி ஒரு பாரம்பரிய கதை சொல்லப்படுகிறது. இச்சுரூபமானது இன்றைய கிரேக்க நாட்டில் உள்ள ரோடோ தீவில் உள்ள ஒரு துறவியர் இல்லத்தில் இருந்ததாம். கி.பி. 1522ஆம் ஆண்டு துருக்கிய பேரரசர் இரண்டாம் சுலைமான் ஐரோப்பாவின் மீது போர் தொடுத்து தான் வென்ற இடங்களிலிருந்த விலைமதிப்பில்லாத கலைபொக்கிசங்களை தன் நாட்டிற்கு கொண்டு சென்றார். அவ்வமயம் அவர் ரோடா தீவிற்கு படையெடுத்த பொழுது, வானதூதர்கள் இச்சுரூபத்தை இம்மலைக்கு கொண்டு வந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்பாரம்பரியத்தையும் தாண்டி, வெரோனா மற்றும் விச்சென்சா பகுதிகளில் வியாகுல அன்னையின் மீதான பக்தி பல நூற்றாண்டுகளாக பரவலாக காணப்படுகிறது என்பது வரலாற்று உண்மை.

வரலாற்று ரீதியாக காண்கிறபோது உண்மையில் இச்சுரூபமானது கி.பி. 1432ஆம் ஆண்டு அப்பகுதியின் பெருந்தனவந்தரான லுதோவிக் என்பவரால் வழங்கப்பட்டது என்பது உறுதியாகிறது. இச்சிரூபமானது வெஸ்பெர்பில்ட் (vesperbild) எனப்படுகின்ற ஜெர்மானிய கலைவடிவமைப்பில் வடிக்கப்பட்ட வியாகுல அன்னையின் திருஉருவமாகும்.



ஒரு இப்படியிருக்கையில் ரோடோ தீவிலிருந்து வந்ததாக எப்படி கதைகள் உருவாயின? இச்சிற்றாலயம் அமைக்கப்பட்டவுடன் அதன் பராமரிப்பானது 'ஜெருசலேமின் பாதுகாவலர்கள்' (Cavelieri Gerusolimitani) என்ற குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. அக்குழுவிற்கு 'ரோடி' என்கிற பெயரும் இருந்ததால், அதிலிருந்து இப்புனைவு ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்று கூறுவோரும் உளர்.

வெரோனாவில் உள்ள புனித ஜெனோவின் துறவற மடத்துடன் தொடர்புடை துறவிகள் ஏற்கனவே கி.பி. 1000ஆம் ஆண்டில் பால்தோ பகுதியில் வாழ்ந்ததாகவும், குறைந்தபட்சம் 13ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து மோன்தோபால்தோவின் அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட தேவாலயம் ஒன்று இருந்ததாகவும் மடாலய ஆவணங்கள்





8-ம் பக்க தொடர்ச்சி.........

. . . இப்போதே போ" (வி.ப. 3:9-10) என்று பார்வோனிடம் செல்ல மோசேயைப் பணிக்கின்றார்.

எகிப்தில் இஸ்ரயேலர் அனுபவித்த துன்பங்களை நாம் அறிவோம். அன்னை மரியா அவைகளை எல்லாம் எகிப்திற்குப் போகும் போதும், அங்கு தங்கியிருந்த போதும், திரும்பிய போதும் மனதில் வைத்து சிந்தித்து வந்தார். 'எகிப்தியர் இஸ்ரயேல் மக்களைக் கொடுமைப்படுத்தி வேலைவாங்கினர் கடினமான சாந்து செங்கல் வேலையாலும், அனைத்து வயல்வெளி வேலையாலும், மேலும் கொடுமைப்படுத்தி வாங்கிய ஒவ்வொரு வேலையாலும், அவர்கள் வாழ்க்கையே கசந்து போகும்படி செய்தனர்" (வி.ப. 1:13-14) என்று விடுதலைப் பயண நூல் கூறுவதை அன்னை மரியா சிந்தித்த வண்ணம், இறைவனின் உடனிருப்பை உணர்ந்தவராய் தனது பயணத்தின் கடினத்தை இலகுவாக்கிக் கொண்டார். வளனாரிடம் துன்புறுவோர் வாழ்வில் இறைவன் ஊடுருவுதலைப் பகிர்ந்து கொண்டார்.

ஏரோது இறக்கும் வரை திருக்குடும்பம் எகிப்தில் இருந்தது. 'எகிப்திலிருந்து என் மகனை அழைத்து வந்தேன்" (11:1) என்ற ஒசேயா இறைவாக்கினரின் கூற்றை மெய்ப்பிக்க இறைமகன் இயேசு நசரயேன் என அழைக்கப்பட தன் தாயகத்தை நோக்கி மகிழ்வுடன் விரைந்தார். ஏரோது காலமானதும் ஆண்டவருடைய தூதர் எகிப்தில் யோசேப்புக்குக் கனவில் தோன்றி மரியாவையும் குழந்தையையும் கூட்டிக்கொண்டு இஸ்ரயேல் நாட்டுக்குச் செல்லும்படி கூறினார். மரியாவின் பயணம் இஸ்ரயேல் நாட்டை அடைந்தது. மிகவும் மகிழ்வுடன் சென்றார். ஆனால் அர்க்கெலா யூதேயாவில் ஆட்சி புரிவதை அறிந்து கலிலேயப் பகுதிக்குச் சென்றார். தனது சொந்த ஊரான நாசரேத்தில் குடியிருந்தார்.

**நிறைவுரை**

மரியாவின் ஐந்தாவது பயணத்தின் வரலாறு மிக நீளமானது. வரலாற்றுக் குறிப்புகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் நற்செய்தி அவரின் பயணத்தின் தொடக்கம், எகிப்தில் வாழ்ந்தது, திரும்ப நாசரேத்தில் குடியேறியதை மிகத் தெளிவாகக் காட்டுகிறது. நம் வாழ்வும் ஒரு பயணம். நாம் அனைவரும் திருப்பயணிகள். எதிர்நோக்கும் திருப்பயணிகள். இறையாட்சி இன்றே மலர்வதைக் கண்டு மகிழ்ந்தும் அதன் முழுமையைத் தேடியும் பயணிக்கும் திருக்கூட்டம் நாம். பாலன் இயேசு, கூடவே இருந்ததால் மரியாவும் வளனாரும் பயணத்தின் களைப்பை உணரவில்லை. இரக்கச் செயல்களை கைவிடவில்லை. இறை நம்பிக்கையில், இறைப்பராமரிப்பில் அவர்களின் பயணமும், அகதிகளாக எகிப்தில் வாழ்ந்த வாழ்வும் நனைந்திருந்தது. எனவே மகிழ்வோடு தமது சொந்த நாட்டுக்குத் திரும்புவோம் என்ற எதிர்பார்ப்பு அவர்களிடம் இருந்தது. நாமும் மரியாவைப் போன்று இறைவனின் உடனிருப்பை எல்லாச் சூழலிலும் உணர்ந்தவர்களாய் பயணிப்போம்.

**மரியா உனக்குத் தெரியுமா?**
உன் குழந்தை எல்லா படைப்புகளின் ஆண்டவர் என்று!
**மரியா உமக்கு தெரியுமா?**
உன் குழந்தை ஒரு நாள் எல்லா நாடுகளையும் ஆழ்வார் என்று!
**மரியா உனக்குத் தெரியுமா?**
உன் குழந்தை விண்ணுலகின் ஆட்டுக்குட்டி என்று!
நீ அணைத்திற்கும் அந்த தூங்கும் குழந்தை "நானே இருக்கின்றவர் ஆவார்" என்று!

**பாடலின் முக்கியத்துவம்**

இது இயேசுவின் பிறப்பு, அவரது அற்புதம், இறை அடையாளம் ஆகியவற்றை மையமாகக் கொண்டது

இயேசுவின் மீட்பின் மகத்துவத்தையும், அவர் மரியாவுக்கும் மனித இனத்திற்கும் கிடைத்த பரிசு என்பதை உணர்த்துகிறது.

மேற்கத்திய கிறிஸ்தவ நாடுகளில் பிரபல்யமான கிறிஸ்மஸ் பாடல் இதுவாகும்.


அன்பான வாசகர்களே! கடந்த இரண்டு ஆண்டுகளாக "அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்" என்ற தலைப்பின் கீழ் கட்டுரைகளை எழுதி, நம்மை சிந்திக்கவும், ஜெபிக்கவும் வைத்த **அருள் பணி. டோமினிக் ஜான் பால் ம.ஊ.ச.** அவர்களுக்கு நம்முடைய நன்றிகளை தெரிவித்துக் கொள்வோம். மேலும் அவருடைய இறைப்பணி சிறக்க நமது வாழ்த்துக்களையும் ஜெபங்களையும் உரித்தாக்கி கொள்வோம்.

**மரியின் ஊழியர் சபை சார்பாக**
**அனைவருக்கும் புத்தாண்டு**
**நல்வாழ்த்துக்கள்**





கூறுகின்றன. மேலும், அந்த ஆலயத்தில் பாலன் இயேசுவை கைகளில் தாங்கியிருக்கும் அன்னையின் திருஉருவப்படம் ஒன்று இருந்ததாகவும், இந்த அன்னையின் திருஉருவத்திற்கே, வியாகுல அன்னையின் திருஉருவத்திற்கு முற்பட்ட காலத்தில், வணக்கம் செலுத்தப்பட்டதாகவும் வரலாறு கூறுகிறது. கி.பி. 1434 -1437ஆம் ஆண்டுகளில் இந்த ஆலயத்தின் பராமரிப்பானது 'ஜெருசலேமின் பாதுகாவலர்கள்' என்ற குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு, கி.பி. 1806ஆம் ஆண்டு நெப்போலியன் திருஅவையில் இருந்த பல்வேறு துறவற அமைப்புகளுக்கு தடைவிதித்து கலைத்த வரை, அவர்கள் பராமரிப்பில் இருந்தது. இவர்களின் பராமரிப்பில் இந்த ஆலயம் இருந்தபொழுது பல்வேறு வளர்ச்சிகளை கண்டது. அன்னையை தரிசிக்க வரும் பக்தர்களின் வசதிக்காக கி.பி. 1458ஆம் ஆண்டு ஆலயத்தை சென்றடைய ஒரு மரப்பாலம் கட்டினர். மேலும், கி.பி.1490–கி.பி.1521 ஆம் ஆண்டு காலக்கட்டத்தில், அவ்வமயம் இருந்த பழைய ஆலயத்தின் மேல் 18 மீட்டர் நீளமும் 7 மீட்டர் அகலமும் கொண்ட புதிய ஆலயத்தை கட்டி ஆலயத்தை அழகான, விசாலமான செபிக்கும் இடமாக மாற்றினர். பதினாறாம் நூற்றாண்டில் ஆலயத்தை சென்றடைய இரண்டு அணுகல் படிக்கட்டுகள் கட்டப்பட்டன. மலையின் அடிவாரத்தில் உள்ள சதுக்கத்திலிருந்து திலியோ பாலம் சென்றடைய 556 படிக்கட்டுகள் செதுக்கப்பட்டன. அங்கிருந்து 234 குறுகிய படிகள் செதுக்கப்பட்டு ஆலயத்தை சென்றடைய வழி ஏற்படுத்தப்பட்டது. இந்த படிக்கட்டு பாதைகள் இன்றளவும் பயன்பாட்டில் உள்ளன. இப்படிகளின் வழியாக ஏறிச் சென்றது ஒரு ஆன்மீக அனுபவமாக இருந்தது என்பது என் நேரடி அனுபவம் என்பதை பதிவு செய்ய விரும்புகிறேன்.



கி.பி. 1625ஆம் ஆண்டு அங்கிருந்த குருக்கள் தங்கும் இல்லத்திற்கு மேல், புதிய விசாலமான ஆலயம் ஒன்று கட்டத் தொடங்கப்பட்டு, அத்திருப்பணிகள் பல்லாண்டுகள் நடைபெற்றன. கி.பி. 1664ஆம் புதிய ஆலயத்திற்கான கூரை அமைக்கப்பட்டு, கி.பி. 1685ஆம் ஆலயம் அர்ச்சிக்கப்பட்டது. இக்காலக்கட்டத்தில் மலைப்பாதைகள் சீரமைக்கப்பட்டு, செப்பனிடப்பட்டதோடு, மலையடிவாரத்தில் திருப்பயணியர் தங்குவதற்கான ஒரு விடுதியும் கட்டப்பட்டது. இதற்கு தேவையான பொருளுதவிகளை தக்ரேதி என்பவர் செய்தார். கி.பி. 1724 மற்றும் கி.பி. 1744ஆம் ஆண்டுகளில் ஜியோவான்னி அந்தோணியோ உர்பானி ஆலயத்தையும், அதன் வளாகத்தில் இருந்த அனைத்து வசதிகள் குறித்து கல்வெட்டு ஒன்றை எழுதிவைத்துள்ளார்.



19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆலயத்தின் முகப்பானது கோதிக் கட்டிட கலையில் புதுப்பிக்கப்பட்டது. இப்பணிகளானது வெரோனா நகரைச் சார்ந்த கட்டிட கலைஞர் ஜிசேப்பே மக்னோத்தி மற்றும் திரேந்தோ நகர் பொறியாளர் எமிலியோ பவோர் ஆகியோரின் நிபுணத்தின் சான்றுகளாக அமைந்துள்ளன. கி.பி.1899ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் தேதி வியாகுல அன்னைக்கு

முடிசூட்டலுடன் ஆலய புதிப்பிக்கும் பணிகள் நிறைவுபெற்றன, தொடர்ச்சியாக ஆலய வளாகத்தை அழகுபடுத்தும் பணிகளும், வளர்ச்சி பணிகளும் நடைபெற்றன. புகழ்பெற்ற சிற்பி உகோ சன்னோனியின் கைவண்ணத்தின் பல்வேறு திருஉருவங்கள் நிறுபெற்றன. இவர் கர்ராரா வெள்ளை பளிங்கு கற்களினால் பல்வேறு திருஉருவங்களை செதுக்கினார். கி.பி. 1900 ஆம் ஆண்டுகளில் ஆலய முகப்பில் உள்ள திருமுழுக்கு யோவான் மற்றும் மரிய மதலேனாள் திருஉருவங்களை செதுக்கி தன் கைத்திறனை உலகிற்கு வெளிப்படுத்தினார். பின், கி.பி 1912-1913ஆம் ஆண்டுகளில் புனித யோசேப்பு மற்றும் மால்டா மாவீரர்களின் (knights of Malta) பாதுகாவலர்களான புனித தோஸ்கானா மற்றும் திருமுழுக்கு யோவானின் திருஉருவங்களை செதுக்கி ஆலயத்தில் நிறுவினார். மேலும், இவரது கைவண்ணத்தில் சிலுவைபாதையின் 14 நிலைகளும், வியாகுலஅன்னை துயரப்பாதையின் 7 நிலைகளும் சுடுமண்கலவையில் வடிக்கப்பட்டு ஆலயத்திற்குள் நிறுவப்பட்டன. ஒப்புரவு அருட்சாதன ஆலயத்தில் உள்ள 'இதோ மனிதன்' திருஉருவமும், இரண்டு செபிக்கும் வானதூதர்களின் உருவங்களும் கி.பி. 1916ஆம் ஆண்டு இவரால் வடிக்கப்பட்டன. இறுதியாக, இவரது இறப்பிற்கு முன் கி.பி. 1919ஆம் ஆண்டு, சிலுவையை தாங்கி செல்லும் இயேசு தன் தாயை சந்திக்கும் அற்புதமான, மனதை உருகவைக்கும் திருஉருவம் செதுக்கப்பட்டது.

கி.பி. 1922ஆம் ஆண்டு வியாகுல அன்னையின் திருஉருவம் இம்மலைக்கு வந்ததன் நான்காம் நூற்றாண்டை கொண்டாடும் விதமாக விண்ணைத்தொடும் உணரமான மணிக்கூண்டு கட்டப்பட்டது. இப்பணியை செய்த பொறியாளர் பெதரிசி அவர்களே, சாலையை செப்பனிட்டதோடு, ஆலயத்தை எளிதில் அணுக கூடிய விதத்தில், மலையை குடைந்து ஒரு சிறிய குகையையும் ஏற்படுத்தி, திருயாத்திகர்கள் ஆலயத்தை எளிதில் அடைய உதவிசெய்தார்.

ஆண்டுகள் பல உருண்டோடின. ஆலயம் பழுதுபட்டது. வியாகுல அன்னைக்கு புதிய ஆலயம், பழைய மெருகு குறையாமலும், குலையாமலும் கட்டப்பட வேண்டும் என்ற எண்ணம் அனைவரின் உள்ளத்திலும் தோன்றியது. எனவே, கட்டிடகலை வல்லுநர் திசாதோ தலைமையில் குழு அமைக்கப்பட்டு, தீர்க்கமான பார்வைகளுடன் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. கி.பி. 1975ல் பழைய ஆலயம் இடிக்கபட்டு, புதிய ஆலயப் பணிகள் தொடங்கப்பட்டன. பழைய ஆலயத்தில் இருந்த அத்துணை கலைபொக்கிசங்களும், ஒரு சிறிய அளவு சேதாரமும் இல்லாமல் பாதுகாக்கப்பட்டு, கட்டப்பட்ட புதிய ஆலயத்தில் நிறுவப்பட்டன. புதிய



ஆலயமானது, கி.பி. 1978ஆம் ஜீன் 4ஆம் தேதி ஆயர் ஜிசேப்பே கர்ராரா அவர்களால் அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது. கி.பி. 1982ஆம் இத்திருத்தலம் 'மைனர் பசிலிக்கா' என்கிற நிலைக்கு உயர்த்தப்பட்டது. கி.பி. 1988ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் தேதி புனித திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் அவர்கள் இத்திருத்தலத்திற்கு வருகை தந்தை அன்னையின் திருஉருவம் முன் செபித்தார்.

திருத்தந்தையின் வருகையையொட்டி ஆலயத்திற்கு செல்லும் மலைப்பாதை முழுவதும் மேம்படுத்தப்பட்டன. இப்பாதை நெடுகிலும் நிறுவப்பட்டுள்ள





# மாதா மன்றாட்டு மாலை

24



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## மேரி உமக்குத் தெரியுமா

இப்பாடல் உலகப் புகழ்பெற்ற கிறிஸ்துமஸ் பாடல் ஆகும். இப்பாடலின் வரிகள் இயேசுவின் தாயான மரியாவுக்கு தனது குழந்தை இயேசுவின் தெய்வீக வல்லமைகளான தண்ணீரில் நடப்பது, குருடருக்கு பார்வை கொடுப்பது, புயலை அடக்குவது மற்றும் அவர் கடவுளின் மகன் என்பது பற்றிய கேள்விகளை எழுப்புகிறது. இது 1985 இல் மார்க் லோரி (Marc Lowry) என்பவரால் எழுதப்பட்டு, பட்டி கிரீன் (Buddy Greene) என்பவரால் இசையமைக்கப்பட்டு மைக்கேல் இங்கிலீஷ் (Michael English) என்பவரால் பாடப்பட்ட புகழ்பெற்ற பாடல், அதன் தமிழாக்கம் இதோ:

மேரி உமக்கு தெரியுமா?
*உன் குழந்தை ஒரு நாள் தண்ணீரில் நடப்பான் என்று!*
மரியா உமக்கு தெரியுமா?
உமது குழந்தை, தன் மகன்களையும் மகள்களையும் மீட்பார் என்று!
மரியா உனக்குத் தெரியுமா?
*உன் குழந்தை உன்னை புதிதாக்க வந்திருக்கின்றார் என்று! உன் குழந்தை தன் கையால் புயலை அடக்குவார் என்று!*
மரியா உனக்கு தெரியுமா?
*உன் குழந்தை வானத்தூதர்கள் நடந்த இடத்தில் நடந்திருக்கிறார் என்று!*
*நீ உன் குழந்தையை முத்தமிடும் போது கடவுளின் முகத்தை முத்தமிடுகிறாய் என்று!*
மரியா உனக்கு தெரியுமா?
குருடர்கள் காண்பார்கள, செவிடர்கள் கேட்ப்பார்கள், இறந்தவர்கள் மீண்டும் எழுவார்கள் என்று!
முடமானவர்கள் துள்ளிக் குதிப்பார்கள், ஊமையர்கள் பேசுவார்கள், ஆட்டுக்குட்டியானவரின் புகழை பாடுவார்கள் என்று!



# இறையடியார் ஆயர். வின்செண்ட் சர்னெல்லி (1835-1898)



அருட் பணி. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

வின்சென்சோ சர்னெல்லி, ஏப்ரல் 5, 1835-ல் நேபிள்ஸ் நகரில் பிறந்தார். இவரின் இரு பெற்றோரும் உயர்வர்க்க குடும்ப வம்சாவளியைச் சேர்ந்தவர்கள். நேபிள்ஸ் நகரில் உள்ள பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றுகொண்டிருக்கும்போது, குருத்துவ அழைப்பை உணர்ந்தார். ஜூலை 22, 1857-ல் குருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். பக்திச்செயல்கள், உயர்நிலை கல்வி மற்றும் பிறர் நலம் பேணும் பணிகளில் குறிப்பாக ஈடுபாடு காட்டினார். குணமாகாத நோயாளிகளுக்கான மருத்துவமனையில் நிறைய நேரம் வேலை செய்து வந்தார். டிசம்பர் 20, 1862-ல் குருவானார். ஏழை மக்களின் கல்விக்காக தன்னை அர்ப்பணிக்கும் நோக்கத்தோடு, தத்துவ ஆய்வு மற்றும் சட்ட ஆய்வுகளைத் தொடர்ந்தார். அவரைத் திருச்சட்டம் (Canon Law) பயில உரோமை நகருக்கு அனுப்ப வைத்தனர். அவர் படித்து முடித்து திரும்பியபின் பொது திருச்சட்டப் பேராசிரியராகவும், உயர்நிலைப் பள்ளியில் சிவில் வரலாற்று ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டார். மே 1875-ல், ஒரு முக்கியமான பங்கில் பங்குத்தந்தையாகவும் நியமிக்கப்பட்டார். பக்தி, உத்வேகம் மற்றும் வறுமை நிலையில் உள்ளவர்களுக்கு உதவுவது இவரின் அன்றாட வாழ்வாகியது. மார்ச் 2, 1879-ல் ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டு, பணியைத் துவங்கினார். ஒரு ஆயராகத் தனது அப்போஸ்தலிக்கப் பணி, அவர் செய்த மூன்று விருதுவாக்குகளால் நிறைவேற்ற முடிவு செய்தார்: “ஒருபோதும் நேரத்தை வீணாக்கக் கூடாது, எப்போதும் சிறந்ததைச் செய்ய வேண்டும் மற்றும் கிறிஸ்தவ ஏழ்மையை வாழ்க்கையில் வாழ வேண்டும்.” 1884-ல் காலரா பரவியபோது, அவரின் புனிதமான உத்வேகம் குறிப்பாகத் தெளிவாகத் தெரிந்தது. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரவும் பகலும் அர்ப்பணித்து பணியாற்றியதற்காக, “பொது சேவையின் தங்கப் பதக்கம்” அவருக்கு வழங்கப்பட்டது. நமது மரியின் ஊழியர் துறவி முத்திப்பேறு மரியா மதலேனா அவர்களின் ஆன்மீக வழிகாட்டலுக்கும் முன்னேற்றத்திற்கும் அவர் சிறப்பான கவனம் செலுத்தினார். 1897-ல் நேபிள்ஸ் நகரின் பேராயராக நியமிக்கப்பட்டார். சில மாதங்களில் ஜனவரி 2, 1898-ல் பக்தியுடன் காலமானார். மே 24, 1898-ல், சகோதரி மரியா மதலேனா ஸ்டாராசே, அவருக்கான புனிதர் பட்டம் வாங்கித்தரும் பணியைதொடங்கக் கோரினார். அந்த நடவடிக்கையின் முதன்மை ஆலோசகர் ஆகவும் நியமிக்கப்பட்டார். ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, தாய் ஸ்டாராசே முத்திப்பேறு பட்டம் பெற்றார். இந்த சபையை சேர்ந்த சகோதரிகளின் கோரிக்கையின் அடிப்படையில் நவம்பர் 17, 1999-ல், மீண்டும் பேராயரை புனிதர் பட்டம் கொடுக்கும் பணி மீண்டும் தொடங்க வத்திக்கான் அங்கீகாரம் அளித்தது.





வெண்கல திருஉருவங்கள், வெரோனா நகர் கலைசிற்பியான ரபேயேலே பொனேதே அவர்களால் வடிக்கப்பட்டன. இறந்த தன் திருமகனை மடியில் தாங்கியிருக்கும், ‘பியதா’ அன்னையானவள் முள்முடி சூடியிருக்கும் விதாகவும், அவரை சுற்றி ஐந்து வானதூதர்கள் செபிக்கும் திருஉருவமும் காண்போர் மனதில் பக்தியையும், வேதனையையும் ஒரு சேர உருவாக்குகிறது. இந்த வரலாற்று நினைவை போற்றும் விதமாக ஆலத்திற்குள்ளும் பல்வேறு திருஉருவங்களை இவர் நிறுவினார். அவற்றில் ஆலயபீடத்திற்கு மேல் ஆண்டவரின் பிறப்பு, இயேசு சிலுவையில் அறையப்படல் மற்றும் தூயஆவியாரின் வருகை போன்றவற்றை சித்தரிக்கும் புடைப்பு ஓவியங்கள் வடிக்கப்பட்டுள்ளன. மேலும், நான்கு தூண்களின் மேல் நான்கு நற்செய்தியாளர்கள் திருஉருவங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆலயப்பீடத்தின் மையப்பகுதியின் மேல் பகுதி மூன்றாகப் பிரிக்கப்பட்டு, இருபுறங்களிலும் மரியின் துதிப்பாடல்களும், மையப்பகுதியில் ஏழுவாள்களால் ஊடுருவப்பட்ட வியாகுல அன்னையின் திருஉருவம் நிறுவப்பட்டுள்ளது. அன்னைக்கு மங்களவார்த்தை அறிவிக்கப்படல் ஒருபுறம் வண்ண ஓவியமாக வரையப்பட்டுள்ளது, மேலும், பழைய ஏற்பாட்டின் முக்கிய கதைமாந்தர்களான ஆபிரகாம், மோசே, தாவீது மற்றும் எசாயா ஆகியோரின் திருஉருவங்களுக்கு மத்தியில் இயேசுவின் கருணை ததும்பும் திருஉருவமானது வடிக்கப்பட்டுள்ளது. கி.பி. 1982ஆம் ஆண்டு திருப்பண்டக பேழையானது நிறுவப்பட்டது. கி.பி. 1988ஆம் ஆண்டு புதிய திருமுழுக்கு தொட்டி நிறுவப்பட்டது. தொட்டியைச் சுற்றி எட்டு அப்பங்களும், தூய ஆவியானவரின் ஏழு கொடைகளும் வடிக்கப்பட்டன.

கி.பி. 1993ஆம் திருத்தந்தையின் வருகையின் நினைவாக, திருச்செபமாலையின் 15 மறையுண்மைகளும் (ஒளியின் மறையுண்மைகள் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் அவர்களால் கி.பி. 2002ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி நிறுவப்பட்டது), சிலுவைப்பாதையின் 14 நிலைகளும் வெண்கல திருஉருவங்களாக நிறுவப்பட்டுள்ளன. இத்திருத்தல திருயாத்திரை முடிக்கும் நேரத்தில் திருவிவிலியத்தையும் கத்தோலிக்க திருஅவையின் விசுவாச கோட்பாடுகளையும் இரத்தினச் சுருக்கமாக வாழ்ந்து, இறையாசீர் பெற்ற அனுபவம் ஏற்படுகிறது.

மோதெனாவிலிருந்து பிரென்னரோ செல்லும் விரைவு சாலையில், வெரோனா நகரை கடந்து திரெந்தோ நோக்கி செல்லும் போது, இடது புறம் திரும்பி மோன்தே பால்தோ மலையை பார்த்தால், மலைமுகடுகளுக்கிடையில் வெற்றித் திருமகளாய் வீற்றிருக்கும் வியாகுல அன்னையின் திருத்தலத்தை காணலாம்.

இத்திருயாத்திரைக்கு தங்களுடன் என்னை அழைத்துச் சென்ற திரு. ஜான் மற்றும் திருமதி. ஜீலி அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள். அவர்கள் செபங்களை இறைவன் கனிவுடன் செவிசாய்ப்பாராக.

அன்னையின் பரிந்துரை செபங்களால், பிறந்திருக்கும் புத்தாண்டில் இறைவன் நம்மை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

**திருப்பயணம் தொடரும்..........**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
# திருப்பாடல்கள் 136-150



சகோ. எட்மன். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | 4 |
| | 5 | | | | | | | 8 | |
| | | 9 | | | | | | | |
| | | | | | | 12 | | | |
| | | | | X | X | 14 | | | |
| | | | | | | | | | |
| | | | 13 | 15 | | | | | |
| | | 10 | | | | | 11 | | |
| | 6 | | | | | | | 7 | |
| 2 | | | | | | | | | 3 |

**வலமிருந்து இடம்**

3. ஆண்டவர் ____ கனிவும் உடையவர்; எளிதில் சினம் கொள்ளாதவர்; பேரன்பு கொண்டவர்.
4. அவர்தம் வல்ல செயலகளுக்காய் அவரைப் போற்றுங்கள்! அவர்தம் மாண்பினைக்
குறித்து அவரைப் போற்றுங்கள்.
7. யாருடைய இறைவனைத் தம் துணையாகக் கொண்டிருப்போர் பேறுபெற்றோர்?
8. எதை இரண்டாகப் பிரித்தவர்க்கு நன்றி செலுத்தவேண்டும்?
14. மனிதர் சிறுமூச்சுக்கு ஒப்பானவர்; அவர்களின் வாழ்நாள்கள் எதன் நிழலுக்கு நிகரானவை?

**இடமிருந்து வலம்**

1. உன்னை நான் நினையாவிடில், எனது மகிழ்ச்சியின் ______ நான் எருசலேமைக் கருதாவிடில், என்
நா மேல்வாயோடு ஒட்டிக்கொள்வதாக!
2. தண்டனைத் தீர்ப்புக்கு உம் _________ இழுக்காதேயும்; ஏனெனில், உயிர் வாழ்வோர் எவரும் உமது
திருமுன் நீதிமான் இல்லை.
5. அவர் தம் மக்களின் ________ உயர்வுறச் செய்தார்; அவருடைய அனைத்து அடியாரும் அவருக்கு
நெருங்கிய அன்பார்ந்த மக்களாகிய இஸ்ரயேல் மக்களும் அவரைப் போற்றுவார்கள். அல்லேலூயா!
6. மெய்யாகவே எவர்கள் உமது பெயருக்கு நன்றி செலுத்துவார்கள்? .
9. தீயோர் தாங்கள் வைத்த கண்ணிகளில் _______ வந்து விழுவார்களாக! நானோ தடையின்றிக்





உணவு பொருட்களை அழிவிலிருந்து காக்கிறது. அதுபோல உலக மாயை என்ற அழிவிலிருந்து நம்மை காத்துக் கொள்ள பணிகின்றார். உப்பு உணவிற்கு சுவையூட்டுகின்றது. உப்பில்லா பண்டம் குப்பையிலே என்பார்கள் நற்செய்தியின் சாரம் இல்லாத வாழ்வும் குப்பைதான். உப்பு, அது சேர்கின்ற உணவோடு கரைந்து சுவையைக் கொடுக்கிறது. மற்ற பொருட்களோடு இணையும் பொழுது தான் அர்த்தம் பெறுகின்றது. அதுபோல நாமும் இந்த உலகத்தோடு கரைந்து பிறரோடு பயனுள்ள சாரமுள்ளவர்களாக இந்த சமுதாயத்திற்கு வளமை சேர்ப்பவர்களாக வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**முதல் வாசக முன்னுரை: (எசா: 58:7-10)**

இன்றைய முதல் வாசகத்தில் எசாயா இறைவாக்கினருக்கு கடவுள் கொடுத்த வாக்குறுதியை காண்கின்றோம். ஆண்டவரின் ஒளி உனக்கு பின் சென்று காக்கும், உன் வாழ்வு விடியல் போல் எழும், உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும், என்ற உயர்ந்த ஆசீர்வாதத்தை தருகிறார் கடவுள். இன்று நமக்கும் அதே ஆசீர்வாதத்தை பொழிய காத்துக் கொண்டிருக்கின்றார். அதற்கு நாம் செய்ய வேண்டிய நல்ல செயல் இறைவார்த்தையை வாசித்து இறைவாக்கினர் எசாயாவைப்போல் நல்ல உள்ளம் படைத்தவர்களாய் வாழ்ந்தால் போதும். நம் வாழ்வும் விடியல் போல் ஒளிரும் என்பதை மனதில் சிந்தித்தவர்களாய் இறைவார்த்தைக்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை: (1கொரி: 2:1-5)**

இன்றைய இரண்டாம் வாசகமானது தூய ஆவியின் வல்லமையை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. உங்கள் நம்பிக்கைக்கு அடிப்படை மனித ஞானம் அல்ல, கடவுளின் வல்லமையே என்ற உயர்ந்த ஆழமான சிந்தனையை எடுத்துக்காட்டுகின்றது. தூய ஆவியின் வல்லமையை உணர்ந்து அதன்படி செயல்படுபவர்கள் கடவுளின் பிள்ளைகள் என்று அழைக்கப்படுகிறார்கள். அத்தகைய தூய ஆவியைப் பெற்று சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைப்போல இறை ஞானத்துடன் செயல்படவும் நம்பிக்கையின் நிலைத்திருக்கவும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுகள்**

1. விண்ணக தந்தையே எம் இறைவா! எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவரத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உம் பாதம் காணிக்கையாக்குகின்றோம். இவர்கள் உலகிற்கு ஒளியாய் இருக்க தேவையான ஆற்றலை கொடுத்து, என்றும் உண்மை, நேர்மை, நீதிக்காக போராடவும் இறை மதிப்பீட்டின்படி வாழவும் அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. உலகிற்கு உப்பாயிருங்கள் என்றுரைத்த இறைவா! வாழ்வில் இறைநம்பிக்கை மற்றும் தன்னம்பிக்கையின்றி வாழும் உள்ளங்களில் இறைச்சிந்தனையை விதைத்து ஆசீர்வதித்திடவும், கிறிஸ்துவின் ஆழமான நம்பிக்கையில் வேரூன்றிட செய்யவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பு ஆண்டவரே! சமூக சேவை செய்பவர்களுக்காக வேண்டுகின்றோம்! இவர்களுடைய தியாக வாழ்வு, கடின உழைப்பு, முன்மாதிரியான வாழ்க்கை முறையை பின்பற்றி நாங்களும் நற்பண்புகளில் வளரவும், உடல் உள்ள சுகத்துடனும், மகிழ்வுடனும் வாழ்ந்திடவும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. குடும்பங்களின் அருள் ஊற்றே எம் இறைவா! எம் பங்கின் குடும்பங்களை ஆசீர்வதியும். இவர்கள் ஒற்றுமையுடனும் விசுவாசத்துடனும் வாழ்ந்திடவும், எம் பங்கின் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு தந்து முன்னேற்ற பாதையில் வளர்ந்திட தேவையான அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

ஞானத்தின் மீது பெருமை பாராட்டி அந்த ஞானத்தை நாமும் நிறைவாக பெற்றிட இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவிமடுப்போம்.

**மன்றாட்டுகள்**

1. கனி உள்ள தந்தையே எம் இறைவா! திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவரத்தார் மற்றும் பொது நிலையினர் செய்யும் இறைபணியை ஆசீர்வதியும் இவர்கள் சந்திக்கின்ற எல்லா பிரச்சினைகளிலும் அருள் கரம் கொண்டு வழி நடத்தியருளும். என்றும் உண்மை, நேர்மை, நீதிக்காக போராடவும், இறை மதிப்பீட்டின்படி வாழவும் அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் என்றுறைத்த இறவைா! எம் நாட்டை ஆளும் தலைவர்கள் அமைதியின் வழியில் மக்களை வழிநடத்த தேவையான ஞானம், கடமையுணர்வு, தியாக வாழ்வு போன்ற குணநலங்களில் வளர்ந்திட அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கமுடையோர் பேறுபெற்றோர் என்றுரைத்த இறவைா! எம் நாட்டில் பசி, பிணி, பஞ்சம் போன்ற கொடுமைகளால் பாதிக்கப்பட்டு வாழ்கின்ற அனைவர் மீதும் உமது இரக்கத்தையும் கனிவையும் பொழிந்து, அவர்கள் வாழ்வு மறுமலர்ச்சி பெற அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. நீதியின் தெய்வமே எம் இறவைா! எம் நாடு வளம் பெற நாளும் உதவும் ராணுவ வீரர்களை உம் கரத்தில் ஒப்படைக்கின்றோம். இவர்களையும் இவர்கள் குடும்பத்தையும் ஆசிர்வதியும். இவர்கள் எண்ணங்கள், விருப்பங்கள் நிறைவேறவும் என்றும் மனமகிழ்வு, மனநிறைவு பெற்று உமது அன்பில் நாளும் வாழ்ந்திட அருள்தர வேண்டுமென்று, இறைவா உம்மை வேண்டுகிறோம்.

**பொதுக்காலம் ஐந்தாம் ஞாயிறு**
**(08.02.2025)**

இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே! பொதுக்காலம் ஐந்தாம் ஞாயிறை சிறப்பிக்கும் நாம் உலகின் ஒளியாக வாழ்வோம். தன்னுடைய சீடர்களின் வாழ்வும், சாட்சியமும் உலகிற்கு உப்பாகவும் ஒளியாகவும் இருக்க வேண்டும் என்பதே இறைமகன் இயேசுவின் வேண்டுகோள். அதே சமயம் உப்பு உவர்ப்பற்று போனால் அது மனிதனால் மிதிபடும் என்றும் கூறுகின்றார் இயேசு. ஆனால் உப்பு உவர்ப்புத்தன்மையை இழப்பதில்லை என்று மட்டுமே நாம் அறிந்திருக்கிறோம். அப்படியென்றால் இயேசு கூறியதன் அர்த்தம் தான் என்ன? பாலஸ்தீன நாடுகளில் வாழும் சாதாரண ஏழை மக்களின் வீடுகளில் ஓடு பதித்த அடுப்புகள் இருக்கும். இந்த அடுப்பில் எப்போதும் சூடு இருக்க வேண்டும் என்பதற்காக அடுப்பின் அடியில் ஓட்டுக்கு கீழே உப்பு கொட்டப்பட்டு அதன் மேல் தான் ஓடுகள் பதிக்கப்படும். ஏனெனில் உப்பு அதிக நேரம் வெப்பத்தை தக்க வைக்கும் பண்புடையது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் அந்த உப்பு வெப்பத்தை தாங்கும் ஆற்றலை இழந்து விடுகின்றது. அப்போது அது வெளியே எடுத்து கொட்டப்படும் இதையே தான் இயேசு சொல்லி இருக்கக்கூடும். மேலும் மிதிபடும் என்பதன் அர்த்தம் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூதர்கள் வேற்று தெய்வத்தை வணங்கிவிட்டு மீண்டும் தாய் மதத்திற்கு திரும்பும் போது, மக்கள் நுழையும் தொழுகை கூடத்தின் வாயில் அருகே நெடுஞ்சான் கிடையாக படுத்து இருக்க வேண்டும். தொழுகை கூடத்திற்கு வரும் மக்கள் அவர்கள் மீது மிதித்து செல்வர். இந்த செயல் நம்பிக்கைக்குரிய வாழ்வை வாழ மறுத்தேன் என்னை தண்டியுங்கள் என்ற அர்த்தத்தை சொல்லுவதாக அமைகிறது. இந்த பின்னணியில் இயேசு இதை சொல்லி இருக்கலாம். அன்பார்ந்தவர்களே! இயேசு உலகின் உப்பாக, ஒளியாக வாழ நம்மை அழைக்கின்றார். உப்பு





கடந்து செல்வேனாக!
10. தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும்,
ஆண்டவர் எங்கே இருக்கிறார்?
12. எனக்கு விடுதலை வழங்கும்; வேற்றினத்தார் கையினின்று என்னை விடுவித்தருளும்; அவர்களது
வாய் பேசுவது ______! அவர்களது வலக்கை வஞ்சமிகு வலக்கை!
15. மானிடர்க்கு உம் வல்லமைச் செயல்களையும் உமது அரசுக்குரிய மாட்சியின் எதையும்
புலப்படுத்துவார்கள்?

**மேலிருந்து கீழ்**

1. இஸ்ரயேல் தன்னை உண்டாக்கினவரைக் குறித்து ______ கொள்வதாக! சீயோனின் மக்கள் தம் அரசரை முன்னிட்டுக் களிகூர்வார்களாக!
4. என்னைப்பற்றிய உம் அறிவு எனக்கு மிகவும் வியப்பாய் உள்ளது! அது உன்னதமானது! என் அறிவுக்கு ______.
5. பண்டைய நாள்களை நான் நினைத்துக் கொள்கின்றேன்; உம் செயல்கள் அனைத்தையும்
குறித்துச் சிந்தனை செய்கின்றேன்; உம் கைவினைகளைப்பற்றி ______ சிந்திக்கின்றேன்.
8. நானோ ஆண்டவரை நோக்கி இவ்வாறு வேண்டினேன்; நீரே என் இறைவன்! ஆண்டவரே!
உம் இரக்கத்திற்காக நான் எழுப்பும் குரலுக்குச் ______.
9. இருள்கூட உமக்க இருட்டாய் இல்லை; இரவும் பகலைப்போல ஒளியாய் இருக்கின்றது; இருளும் உமக்கு ______ இருக்கும்.
14. அவர் வானத்தை மேகங்களால் மறைக்கின்றார்; பூவுலகின்மீது மழையைப் பொழிகின்றார்; ______ புல்லை முளைக்கச் செய்கின்றார்.

**கீழிருந்து மேல்**

2. இறைவா! நீர் என் உள்ளத்தை ஆய்ந்து அறியும்; என் எண்ணங்களை ______ என்னைச் சோதித்துப்பாரும்.
3. அல்லேலூயா! நம்முடைய கடவுளைப் புகழ்ந்து பாடுவது நல்லது; அவரைப் புகழ்வது ______; அதுவே ஏற்புடையது.
6. ஆண்டவரே! உம்மை நோக்கிக் கதறுகின்றேன்; '______ அடைக்கலம்; உயிர் வாழ்வோர்
நாட்டில் நீரே என் பங்கு'.
7. மத்தளம் கொட்டி நர்த்தனம் செய்து அவரைப் போற்றுங்கள்! ______ மீட்டி, குழலினை ஊதி
அவரைப் போற்றுங்கள்!
10. ஆண்டவர் எந்த நாட்டினரைப் பாதுகாக்கின்றார்? அனாதைப் பிள்ளைகளையும் கைம்பெண்களையும்
ஆதரிக்கின்றார்; ஆனால், பொல்லாரின் வழிமுறைகளைக் கவிழ்த்துவிடுகின்றார்.
11. அவரே விண்ணையும் மண்ணையும் கடலையும் அவற்றிலுள்ள யாவற்றையும் உருவாக்கியவர்;
என்றென்றும் நம்பிக்கைக்கு ______ இருப்பவரும் அவரே!
13. எனவே, என்னுள்ளே என் மனம் ஒடுங்கிப் போயிற்று; என் ______ எனக்குள் சோர்ந்து போயிற்று.

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-01-2026**

# மீட்புப் பயணம்

கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி



**நோவா**

பலுகிப் பெருகியது மானிடக் கூட்டம்
பழகிப் பெருகியது தீவினை நாட்டம் -கடவுள்
மானிடனைக் கண்டு உளம் நொந்தார் -உயிர்கள்
யாவினையும் அழித்திட திடம் கொண்டார்

நோவா மட்டும் தனித்து நின்றார் -பாவ
நாட்டம் காணாது ஒதுங்கிச் சென்றார்
கடவுள் வெறுத்த மானிடர் நடுவில்
கடவுளிடம் நெருக்கம் காட்டி வந்தார்

கடவுள் தமக்கு உரைத்த படியே
கருத்தமாய் பேழை முடித்தம் செய்தார்
மேலும் அவர்தாம் மொழிந்தது போலவே
வேண்டும் உயிர்களை அழைத்துக் கொண்டார்

நாற்பது பகலும் நாற்பது இரவுமே
கொடுமையாய் மழைநீர் கொட்டிய போதும் -நுனிக்
காலுமே நனையாமல் நெருக்கடியேதும் இல்லாமல்
சொகுசாய் பேழைக்குள் வாசம் செய்தார்

உண்டும் குடித்தும் இன்பம் கனித்தும்
இயல்பு வாழ்க்கைபோல் ஓய்வும் கொண்டார்
இறைவன் வார்த்தைக்கு பணிந்து நின்றார்
இறுதி வரைக்குமே கனிந்து சென்றார்

உலகம் உருபெற தொடங்கிய காலத்தே
அகிலம் வியக்கும் தன்மை கோலத்தே
பெட்டகம் செய்தவர் இவர் தானாம் -மதி
நுட்பமாய் செய்ததே இவர் பேறாம்

மறு உலகம் மீண்டும் வர -கடவுள்
திரு உளமே பாய்ந்து வர
நோவா இவர் மிகக் காரணமாம்
நேர்மைக்கு இவர் தரும் பாத்திரமாம்

மனிதனை முற்றிலும் அழிக்க வில்லை -கடவுள்
மனிதனை வெறுத்திட விருப்பம் இல்லை -என
எண்பித்து கூற இது சான்றாகும் -அவரிடம்
ஒன்றித்து சேர நல்லக் கூறாகும்.





உருவாக்கும் திட்டங்கள் மக்களின் வளர்ச்சிக்காய் அமைந்திடவும், வரம் அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. விண்ணகத்தின் திறவுக்கோலே எம் இறைவா! கிறிஸ்தவ மக்களாகிய நாம் அனைவரும் “மனமாறுங்கள்” என்னும் அழைப்பை ஏற்று விண்ணக வாழ்விற்கு தயாரிக்க, மண்ணக வாழ்வில் எங்களால் இயன்ற உதவியை பிறருக்கு மனமுவந்து செய்திட வரமருள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன் என்று மொழிந்த எம் இறைவா! எம் திருஅவைக்கு தேவையான ஆலயங்களை மிகுதி ஆக்கியருளும். அதனால் எம் திருஅவை தொடர்ந்து இறையரசு பணியை கட்டி எழுப்ப வரமருள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**பொதுக்காலம் நான்காம் ஞாயிறு**
**(01. 02. 2026)**

அன்பானவர்களே! பொதுக்காலம் நான்காம் ஞாயிறை சிறப்பிக்கும் நமக்கு திருஅவையானது மலைப்பொழிவின் மகத்துவத்தை எடுத்துக் கூறுகிறது. கண் போன போக்கில் கால்களும், கால் போன போக்கில் மனமும், மனம் போன போக்கில் மனிதனும் போய்க்கொண்டிருக்கும் நிலைதான் இன்று மேலோங்கி நிற்கிறது. எப்படியும் வாழலாம் என்பதல்ல வாழ்க்கை, இப்படித்தான் வாழ வேண்டும் என்று வரையறை செய்து வாழ்வதே வாழ்க்கை. அதிலும் கிறிஸ்தவர்களாகிய நாம் எப்படிப்பட்ட வாழ்வு வாழ வேண்டும் என்பதை மிகத் தெளிவாக தனது மலைப்பொழிவின் வழியாக இறைமகன் நமக்கு எடுத்துக் கூறுகிறார். அதை வாழ்வாக்குவது என்பது மிகக் கடினமான ஒன்றுதான். ஆனால் அதிலே தான் நமது கிறிஸ்துவ விளிம்பியங்களும் மதிப்பீடுகளும் அடங்கியுள்ளது. அதை வாழ்வாக்கும் போது நாம் அடையும் கைமாறு என்ன என்பதையும் அழகாக கூறியுள்ளார் நம் இறைமகன் இயேசு. இவற்றை பின்பற்றி வாழ முற்படும் போது துன்பங்கள் வரலாம், அவமானங்கள் ஏற்படலாம், அவருக்காக துன்பங்களை ஏற்பதுக்கும் நீங்கள் அருள் பெற்றுள்ளீர்கள் என பவுலும், கிறிஸ்தவர்களாய் இருக்கும் நீங்கள் துன்பங்களை ஏற்பதற்கு வெட்கப்படலாகாது என பேதுருவும் கூறுவதைப் போல கடவுளின் பொருட்டு துன்பங்களை ஏற்றுக் கொள்ள தயங்கலாகாது. நம் இறைமகன் இயேசு கிறிஸ்துவின் செயல்பாடு அனைத்தும் மலைப்பொழிவின் அடிப்படையில் அமைந்திருந்ததை நாம் காண முடிகிறது. அவரது மதிப்பீடுகள் இந்த உலகிற்கு சவாலாக இருப்பதை நாம் உணர முடிகிறது. எனவே இயேசுவின் மலைப்பொழிவை நம் வாழ்வாக்கி நாமும் பேறுபெற்றவர்களாக வாழ இத்திருப்பலியில் ஜெபிப்போம்.

**முதல் வாசக முன்னுரை: (செப். 2: 3,3:12-13)**

ஏழைகள் சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள். ஏழைகளாக வாழ்வதே சாபக்கேடு என்ற எண்ணமுடைய காலகட்டத்தில் வாழ்ந்த இறைவாக்கினர் செப்பனியா ஆண்டவரின் கட்டளைகளைக் கடைப்பிடித்து, நேர்மையை நாடவும், மனத்தாழ்ச்சியோடு ஆண்டவரைத் தேடவும், அழைப்பு விடுக்கின்றார். ஆண்டவரின் சினத்தின் நாளில் ஏழைகளுக்குப் புகலிடம் உண்டு என்று ஆறுதல் கூறும் முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை: (1 கொரி. 1:26-31)**

உலகம் மடமை எனக் கருதுபவற்றைக் கிறிஸ்து தேர்ந்து கொண்டார். யூத மக்கள் அவமானச் சின்னமாக கருதிய சிலுவையின் மூலமே நமக்கு மீட்பு தந்தார். அந்த அளவிற்கு இறைமகன் தாழ்ச்சி கொண்டார். எனவே நாமும் நம் வாழ்க்கையில் வரும் சிலுவையாகிய துன்பங்களைத் தாழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு வாழ்வோம். நமக்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்த இயேசுவின்

குறிப்பிட்ட பணிக்காக அழைக்கப்படுகிறோம். மண்ணுலகில், மனித உறவில் இயேசு தனது இறையாட்சி பணியை தொடர்ந்து ஆற்ற சீமோன், அந்திரேயு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரை அழைக்கின்றார். இயேசுவால் அழைக்கப்பட்ட அவர்களும் திறந்த மனதோடு அவரோடு செல்கின்றனர். இயேசு இவர்களை தேர்ந்தெடுத்தது எதற்காக? தலைவா! தலைவா! என்று முழக்கமிடவா? அல்லது அவருக்காக ஒரு கூட்டம் சேர்க்கவா? இல்லை மாறாக தனது நற்செய்தியையும் வாழ்வையும் அவர்கள் வழியாக உலகிற்கு பறைசாற்றிடவே அழைக்கின்றார். முதன்முதலாக அழைப்பு பெற்ற புனித பேதுருவை பற்றி புனித அகஸ்தினார், "மீன் பிடிப்பவரான பேதுரு தன் வலைகளை விட்டு விடவில்லை மாறாக மனிதர்களை பிடிப்பவராக மாறினார்" என்று எழுதினார். ஒருவர் மனமாற்றம் பெறும்போது இயேசுவின் இறையாட்சி பணியை செய்யும் கருவியாக மாறும் அருளை இறைவனிடமிருந்து பெற்றுக் கொள்கின்றார்கள். இயேசு அழைத்த திருத்தூதர்கள் அன்புள்ளம் கொண்டவர்கள், நற்செய்தியை பறைசாற்றும் துணிச்சல் கொண்டவர்கள், கடலோடும் அலையோடும் போராடுபவர்கள், எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்கள், இயேசுவின் படிப்பினைகளை உள்வாங்கி அவற்றை அறிவிக்க வேண்டும் என்ற தாகம் கொண்டவர்கள் எனவேதான் இவர்களை தன் உடன் உழைப்பாளர்களாக, தோழர்களாக, நண்பர்களாக தன்னுடன் கொண்டார். இயேசுவின் அழைப்பை ஏற்று அவர் பணியை தொடரும் இறையாட்சி பணியாளர்கள் அனைவரும் நெஞ்சில் நேர்மை உடையவர்களாக, வீரமுடையவர்களாக, துன்பங்களை தாங்கும் மனப்பக்குவம் கொண்டவர்களாக, இயேசுவின் போதனைகளை அறிவிக்கும் தாகம் கொண்டவர்களாக வாழ வேண்டும் என்பதே இறைமகன் இயேசுவின் கனவாகும். அவரது கனவு நினைவாகும் பொருட்டு நாமும் சிறிது ஒத்துழைத்திட இத்திருப்பலியில் ஜெபிப்போம்.

**முதல் வாசக முன்னுரை: (ஏசா 9: 1-4)**

இன்று நமக்கு கொடுக்கப்பட்ட முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா மூலம் ஆண்டவர் நமக்கு தருவது "நம்பிக்கை". பாவம் மற்றும் இருளினால் அடிமையாக்கப்பட்ட மக்களுக்கு கடவுள் தனது மீட்பின் ஒளியை அருளுகிறார். கிறிஸ்துவின் பிறப்பு மூலம் ஒளியை பெறும் நாம் அவரே ஒளியானவர் என்றும், ஒவ்வொருவரும் சந்திக்கும் இருளை அகற்றி, உண்மையான மகிழ்ச்சியையும், விடுதலையும் அருளுவார் என்கிற வாசகத்திற்கு நம்பிக்கையோடு மனம் திறப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை: (1 கொரி. 1:10-13,17)**

கொரிந்து மக்களிடம் காணப்படும் பிளவுகள், சண்டைகள் இவ்வாசகத்தில் காணப்படுகின்றது. ஒற்றுமையுடன் இருக்கவும், சிலுவையின் நற்செய்தியின் முக்கியத்துவத்தை பற்றியும், ஒரே எண்ணமும், ஒரே மனதுடனும் வாழ வேண்டும் என்றும், மனிதர்களைப் பின்பற்ற அல்ல, கிறிஸ்துவின் சிலுவையை பின்பற்ற வேண்டும் என்று புனித பவுல் கூறும் இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவி கொடுப்போம்.

**மன்றாட்டுகள்**

1. திருஅவையின் ஊற்றாய் விளங்கும் எம் தந்தையே! எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் அனைவரையும் உன் பாதம் காணிக்கை மலராக்குகின்றோம். இவர்கள் இறைமக்களை கிறிஸ்துவின் பேரொளியில் நல்வழி நடத்திட, உடல், உள்ள, மற்றும் ஆம நலனுடன் வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. கருணையே உருவான எம் இறைவா! எம் தாய் திருநாட்டை ஆளும் தலைவர்களை ஆசீர்வதியும். இவர்கள் மக்களை நல்வழி நடத்தவும்,





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஜான் பால் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்



## ஆண்டவரின் திருமுழுக்கு விழா (11.01.2025)

இயேசுவின் திருமுழுக்கு விழா நம்மை மறு கிறிஸ்துவாக வாழ அழைக்கும் விழா. நாம் திருமுழுக்கின் வழியாக மூவொரு கடவுளின் வாழ்வில் பங்கெடுக்கின்றோம். அருள் வாழ்வு சார்ந்த நற்பண்புகளையும் தூய ஆவியாரின் கொடைகளையும் பெறுகின்றோம். இயேசு திருமுழுக்கு பெற்றபோது வானிலிருந்து வந்த குரல் ஒரு பேருண்மையை வெளிப்படுத்தியது. "என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைக்கின்றேன். திருமுழுக்கின் வழியாக நாம் கடவுளின் பிள்ளைகளாகிறோம் என்னும் உண்மையை வெளிப்படையாக அறிக்கையிடப்படுகிறது. நாம் கிறிஸ்துவின் சீடர்கள் என்னும் தகுதி வழங்கப்பட்டு, புதிய மனிதர்களாக தாய் திருஅவையின் அங்கத்தினராக புது பிறப்பு பெறுகிறோம். நமது திருமுழுக்கும் இயேசுவின் அன்பாட்சி பணியினை தொடர நமக்கு விடுக்கப்படும் அழைப்பாகும். பகைமை, ஏற்றத்தாழ்வு, போட்டி மனப்பான்மை, பழிக்குப்பழி, அநீதி, கண்டுகொள்ளாமை ஆகியவை நிரம்பி வடியும் சமூகத்தில் அன்பை, மன்னிப்பை, இரக்கத்தை, பகிர்வை, தாராள குணத்தை, கூடி வாழ்ந்தலை, இணைந்து செயல்படுத்துதலை நடைமுறைப்படுத்தும் புதிய சமூக வாழ்வுக்கான அழைப்பு நமக்கு விடுக்கப்பட்டுள்ளது. திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரும் ஆண்டவரின் வழியில் நடக்க வேண்டும். குற்றம், பாவம் முதலிய மேடு பள்ளங்களை அகற்ற வேண்டும். பாவத்தால் இழந்துவிட்ட தெய்வீக வாழ்வை வழங்கவே இயேசு மனிதராக பிறந்தார். தனது இறப்பினாலும், உயிர்ப்பினாலும் இந்த அருள் வாழ்வை நாம் பெறுவதற்கு வழி செய்தார். இயேசுவிடம் பாவம் இல்லாத போதும், அவர் திருமுழுக்கு பெற்றது அவர் தன்னுடைய பணிவாழ்வை தொடங்கி விட்டார் என்ற அர்த்தத்தை தருகின்றது. ஆகவே இயேசுவைப் போன்று தூய ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும் நாம் அவருடைய பணியை செய்ய முன் வருவோம் அதன் வழியாக இறையருள் நிறைவாய் பெற இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**முதல் வாசக முன்னுரை: (எசா: 42: 1-4, 6-7)**

ஆண்டவர் தேர்ந்து கொண்ட ஊழியனைப் பற்றியும், அவர் உலகிற்கு நீதி, வெளிச்சம், மற்றும் விடுதலை கொண்டு வருவதைப் பற்றியும் இவ்வாசகம் தெளிவுபடுத்துகிறது. நம் ஆண்டவராகிய தலைவர் எவ்வாறு போராடி அனைவரையும் தன் கண்ணின் கருமணியாக வைத்து காப்பது போல நம்மைச் சுற்றியுள்ள அனைவரையும் நீதியின் பாதையில் சோர்வடையாமல் நடத்திடவும், நாமே நடந்திடவும் இறைவாக்கினர் எசாயா நூலில் இருந்து எடுக்கப்பட்ட இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.!

**இரண்டாம் வாசக முன்னுரை: (தி.பணி. 10: 34-38)**

கடவுள் எந்த மனிதரையும் வேறுபடுத்தி பார்ப்பவர் அல்ல என்றும், கடவுளின் சொற்படி நடப்பவர்கள் அனைவரையும் அவர் ஏற்றுக்கொள்கிறார் என்றும் கிறிஸ்துவே எல்லா மக்களுக்கும் ஆண்டவர் என்றும் இரண்டாம் வாசகம் கூறுகிறது. நம்மை படைத்தவரைப் போல எல்லோருக்கும் எல்லாமாக இருக்க, வாழ, வழிகாட்ட, அழைப்பு விடுக்கும் இவ்வாசகத்திற்கு நம்மையே தயாரிப்போம்!

**மன்றாட்டுக்கள்**

1. தாழ்ச்சியின் சிகரமே எம் இறைவா! திருமுழுக்கின் நிறைவான நற்செய்தி அறிவிப்பு பணியை நாளும் ஆற்றிவரும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவரத்தார் அனைவரையும் உன் கரம் ஒப்புக்கொடுக்கின்றோம். தொடர்ந்து இவர்கள் நற்செய்தியாலும் நற்செயல்களாலும் இறைமக்களை இறைப்பாதையில் வழி நடத்திட வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. வழிகாட்டும் வள்ளலே எம் இறைவா! எம் நாட்டை ஆளும் தலைவர்கள் பொதுநலச் சிந்தனை உடன் நாட்டை வழி நடத்த தேவையான ஞானத்தை தந்தருளும். இவர்கள் தங்களுக்கு கொடுத்த அதிகாரத்தை நல்ல முறையில் பயன்படுத்தி பல சிறந்த திட்டங்களை மக்கள் மேம்பாட்டிற்கு தந்து உதவிட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. என் அன்பார்ந்த மைந்தர் இவரே என்றுரைத்த இறைவா! திருமுழுக்கு பெற்ற கிறிஸ்தவர்கள் அனைவரும் இறைப்பணியில் ஆர்வம் காட்டிடவும் திருஅவையின் படிப்பினைகளை கடைபிடிக்கவும் தங்கள் குழந்தைகளை இறைஞானம், பக்தி, தேவபயத்தில் வளர்த்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. எங்களை ஆண்டு வழிநடத்தும் பரம்பொருளே எம் இறைவா! இவ்வுலகில் கண்டுகொள்ளாமல் ஒதுக்கப்படுகின்ற மாற்றுத்திறனாளிகள், கைம்பெண்கள், ஆதரவின்றி அனாதை இல்லங்களில் வாழும் முதியவர்கள், பல்வேறு தீராத நோயினால் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைத்து மக்கள் மீதும் தூய ஆவியை நிறைவாய் பொழிந்து, அவர்கள் இழந்த அனைத்தையும் திரும்ப பெற்று வாழ்ந்திட இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் இரண்டாம் ஞாயிறு
## (18. 01. 2026)

அன்பார்ந்த இறைமக்களே பொதுக்காலம் இரண்டாம் ஞாயிறான இன்று "அறிமுகமாக்குவதே சாட்சிய வாழ்வு" என்ற மைய சிந்தனை நமக்கு தரப்பட்டுள்ளது. அடுத்தவர்களோடு ஒப்பீடு செய்து நான் மேலானவன் என்று தன்னை அடையாளம் காட்டி ஆணவ சிந்தனை கொண்ட மக்கள் வாழும் இவ்வுலகில் திருமுழுக்கு யோவான் ஒரு சவாலாகயிருக்கிறார். தன் இயல்பில் மகிழ்ந்திருந்தது இவர்தான். இறைமகன் என்று இயேசுவை அறிமுகப்படுத்தி அவரது உயர்வை முதன்மைப்படுத்துகின்றார். உண்மையின் குரலானார் திருமுழுக்கு யோவான். உண்மையை பேச ஒருபோதும் தயங்கியவர் அல்ல திருமுழுக்கு யோவான். தான் யார்? தனது பணி என்ன? என்பதையும் சிறிதும் தயக்கமின்றி ஏற்றுக் கொண்டவர், பாலை நிலத்தின் குரலாக ஒலித்தவர். இயேசுவை பற்றிய திருமுழுக்கு யோவானின் சாட்சியம் இறைவாக்கினர்களின் மேலான சாட்சியம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. உலகின் பாவங்களைப் போக்கும் செம்மறியாக இயேசுவை அறிமுகப்படுத்தும் யோவான், இயேசு மனிதர்களை பாவத்திலிருந்து மீட்கும் மீட்பர் என்பதையும் தெளிவுபடுத்துகின்றார். எனவே தன்னை பின்னிலைப்படுத்தி இயேசுவை முன்னிலைப்படுத்தி அவரது உன்னத வாழ்வை நமக்கு அறிமுகப்படுத்தும் திருமுழுக்கு யோவானை போல நாமும் மாறுவோம். விரும்பி ஏற்ற பயணத்தை விருப்பமுடன் முடித்து உலகை





உயிர்பித்த இயேசுவின் வழிநடத்தலில் நடக்கவிருக்கும் நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் அடையாளத்தை பெற வேண்டும். அராஜகமும், வன்முறையும் மலிந்து கிடக்கும் இவ்வுலகில் அகிம்சைக்கும், அமைதிக்கும் குரல் கொடுத்து உலகின் உன்னதவர்களாக உழல்வோம். அதுபோல இயேசுவின் வார்த்தையை அறிவிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும் தனது பெயரையோ, புகழையோ, திறமைகளையோ, அறிவையோ முன்னிலைப்படுத்தாது இயேசுவை முன்னிலைப்படுத்தி நாம் ஒரு சிறு கருவி தான் என்பதை மட்டும் ஆழமாக புரிந்தோமேயானால் நிலையான ஆசீர்வாதம் உண்டு என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் நுழைவோம்.

**முதல் வாசக முன்னுரை (எசாயா 49 :3, 5-6)**

யாக்கோபின் குலங்களை நிலை நிறுத்துவதற்கும், இஸ்ரேயலில் காக்கப்பட்டோரைத் திருப்பிக் கொணர்வதற்கும் நீ என் ஊழியனாய் இருப்பது எளிதன்றோ? உலகம் முழுவதும் பிற இனத்தாருக்கு ஒளியாக ஏற்படுத்துவார் என ஒவ்வொருவரும் பணிபுரிய அழைக்கப்படுகின்றோம். இவ்வாறு இறைவாக்கினர் எசாயா இன்றைய முதல் வாசகத்தின் மூலம் அறைகூவல் விடுக்கின்றதை கவனமுடன் கேட்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை (1 கொரி. 1:1-3)**

இன்றைய இரண்டாம் வாசகமானது இயேசு கிறிஸ்துவோடு இணைந்து, தூயவராக்கப்பட்டு, இறை மக்களாக இருக்க அழைப்பு விடுக்கின்றது. நாம் எவ்வளவுதான் தீமைகளிலும் பாவத்திலும் வாழ்ந்தாலும் இறைவனது பார்வையில் நாம் விலை ஏறப்பெற்றவர்களாகவும் தூயவர்களாகவும் இருப்பதை சுட்டிக்காட்டும் இரண்டாம் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. செம்மறியான என் இறைவா! என் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவரத்தார் அனைவரையும் நீரே ஆயராக இருந்து பாதுகாத்தருளும். இவர்களே உமது பிறப்புக்கும் உயிர்ப்புக்கும் சான்றுகளாக வாழ்ந்து உமது அன்பை விதைத்து நம்பிக்கையால் திருஅவையை கட்டி எழுப்ப அருள் தர வேண்டும் என்று, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. தூயவரான எம் இறைவா! எம் பாரத திருநாட்டை வழிநடத்தும் அனைத்து தலைவர்களும் பொதுநலத்துடன் தங்களது அதிகாரத்தை பயன்படுத்தி மக்களை பாதுகாத்திடவும், நாட்டில் துன்பம், வறுமை, ஏழ்மை மற்றும் வேலை வாய்ப்பின்மையை நீக்கி நலன்களால் நிறைத்து முன்னேற்ற பாதையில் வழி நடத்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் என்றுரைத்த எம் இறைவா! தூய ஆவியால் திருமுழுக்கு பெற்ற நாங்கள் எங்கள் வார்த்தையாலும், செயலாலும் மற்றும் வாழ்வாலும் கிறிஸ்துவின் மதிப்பீட்டின்படி வாழ்ந்து சான்று பகிர்ந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. வாழ்வின் வழியே இறைவா! குழந்தைகளை மற்றும் இளையோரை ஆசீர்வதித்து, அவர்கள் தங்கள் வாழ்வில் வெற்றி பெற, நாங்கள் ஏணியாக இருந்து அவர்களுக்கு உதவிட, தேவையான நல் மனதை தந்தருள வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## பொதுக்காலம் மூன்றாம் ஞாயிறு
## (25. 01. 2026)

அன்பார்ந்த இறைமக்களே! இன்று, "இறையாட்சி பணிதொடர" என்ற சிந்தனையை மையமாக திருஅவை நமக்கு தருகிறது. பிரச்சனைகளே வாழ்வு என்று பயணித்துக் கொண்டிருக்கும் இந்த சமூகத்தில், துணிந்து இயேசுவின் பணி தொடர்வோம் என்று நம்மை அழைக்கிறது பொதுக்காலம் மூன்றாவது ஞாயிறு. இறை சாயலில் படைக்கப்பட்ட ஒவ்வொருவரும் ஒரு